

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் 76 இதழ் 7-8

நந்தன ஸ்ரீ ஆனி-ஆவணி மீ (2012 July-August)

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நூலகம்





## வாடி நீ வாளா வருந்தல் என்பான்

திருச்சிற்றம்பலம்

பாடுமா பாடிப்ப ணியுமா றறியேன்
பனுவுமா பனுவிப் பரவுமா றறியேன்
தேடுமா தேடித்தி ருத்துமா றறியேன்
செல்லுமா செல்லச்செ லுத்துமா றறியேன்
கூடுமா றெங்ஙன மோஎன்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை ஆண்டு
வாடிநீ வாளா வருந்தல்என் பானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.

திருச்சிற்றம்பலம்

–சுந்தரமூர்த்தி நாயனார்–





பொழிப்புரை: மண்ணுலக மயக்கத்தால், முன்னோர் பாடிவைத்த அருட்பாக்களை அவர்கள் பாடிய வண்ணமே பாடி வழிபடும் முறையை நான் அறியேன். நானாக அருட்பாக்களைப் பாடும் முறைப்படி பாடி அருச்சிக்கும் முறையையும் அறியேன். மனத்தினுள்ளே ஒழிந்திருக்கும் குற்றங்களைத் தேடிக்கண்டு அவற்றைத் திருத்தும் வழியை அறியேன். இவ்வழுக்கு மனத்தைச் செந்நெறியிற் செல்லுமாறு செலுத்தும் வழியையும் அறியேன். இக்குற்றங் குறைகளால் பெருமானைக் கூடுமாறு எவ்வாறு எனப் பிரார்த்தித்தேன். இப்பிரார்த்தனைக்கு இரங்கி 'இவன் நமது ஊரன்' எனச் சுட்டிக்காட்டித் தன்னுடன் கூட்டிக் கொணர்ந்து தொண்டனாக ஆண்டு கொண்டு 'நீ ஒன்றுக்கும் வீணாக வாடி வருந்தாதே' என்று அபயமளித்த தலைவனை இந்த வலிவலத் தலத்தில் வந்து கண்டு கொண்டேன்.

சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 01-07-2012<br>05-08-2012 | ஞாயிறு<br>ஞாயிறு | காலை 8.00<br>மணிமுதல் | சிவதொண்டன் நிலையம்<br>யாழ்ப்பாணம் |
| ஆயிலியம் | 21-07-2012<br>17-08-2012 | சனி<br>வெள்ளி | நண்பகல் | யாழ்ப்பாணம்<br>சிவதொண்டன் நிலையம் |
| | | | பிற்பகல் | செங்கலடி<br>சிவதொண்டன் நிலையம்<br>கொழும்புத்துறை ஆச்சிரமம் |

சிவதொண்டன் ஆசிரியரின் மின்னஞ்சல்: editorsivathondan@ymail.com
யாழ் சிவதொண்டன் நிலைய மின்னஞ்சல்: sivathondanjfn@sltnet.lk

சிவதொண்டன் இணையத்தளம்:
www.sivathondan.org

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சப்பரத்திருவிழா (15-08-2012), தேர்த்திருவிழா (16-08-2012), தீர்த்தத் திருவிழா (17-08-2012) நாட்களில் நல்லூர்த் தேரடியில் அன்னதானம் வழங்கப்படும்.

**நினைக்கு மடியாரை நீயேநா னென்றே**
**அணைக்குந் திருக்கரந்தா னென்னே - கனைக்குங்**
**கடல்சூழ் கவினிலங்கைக் கார்சூழ்நல் லூரான்,**
**தொடுக்கும்வல் வேலைத் துதி**

~நற்சிந்தனை~

# பொருளடக்கம்

**விடயம்** **பக்கம்**


சுக சொரூபத்தை அடைவேனோ ........ 75
கதிர்காம புராணம் கூறும் கதிர்காம மகத்துவம் ........ 76
அருள்மொழிகளிலுள்ள உவமைகள் ........ 79
என்குருபர புங்கவ சிங்கமே ........ 81
விவேக சூடாமணி ........ 84
மழலை மந்திரம் ........ 86
நித்தியரான எங்கள் செல்லப்பா சுவாமிகள் ........ 90
நல்ல மனம் (ஆசிரியர்) ........ 92
நற்சிந்தனை ........ 93
*Natchinthanai* ........ 95
*The Saiva Saints* ........ 96
*The Guru* ........ 97
*Yogaswami: The Sage of Lanka* ........ 98


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் 76 நந்தன ஹு ஆனி-ஆவணி மீ (2012 July-August) இதழ் 7-8

உ

## சுக சொரூபத்தை அடைவேனோ

தனதனா தத்தனத் தனதனா தத்தனத்
தனதனா தத்தனத் - தனதான

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் - டரிதாய

சமயபே தத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் - பரமான

துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் - பதிநீடு

துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் - றடைவேனோ

புரிசைசூழ் செய்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் - ரமசூரன்

புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் - கருள்வோனே

கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் - தமராடிக்

கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் - பெருமாளே.

~திருப்புகழ்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம புராணம் கூறும் கதிர்காம மகத்துவம்

வடக்கேயுள்ள திருக்கைலாசம் போன்று தெற்கேயுள்ள திருத்தலங்கள் சிலவும் போற்றப்படுகின்றன. இத்திருத்தலங்களைத் தென்கைலாயம் அல்லது தக்ஷிணகைலாசம் என வழங்குவர். தக்ஷிணகைலாச மான்மியம் என்னும் நூல் இத்திருத்தலங்களின் மாட்சிமையை எடுத்துரைக்கின்றது. இம்மான்மியத்திலே 'கதிர்காம'த்தைச் சிறப்பித்துரைக்கும் பகுதிகள் சிலவும் உள்ளன. அவற்றைத் திரட்டிப் பதினேழு படலங்களிற் பாடியிருக்கும் நூலே கதிர்காம புராணம். கதிர்காம புராணத்திற் கூறப்பட்டிருக்கும் கதிர்காம மாட்சி கற்பனையன்று. கற்பனையெனின் உரை உணர்வுக் கடங்காத இத்திருத்தலமாட்சியை ஒருவாறு உணர்த்த முயலும் உபாயம் என்பதே உண்மையாம். இப் புராணம் உணர்த்தும் உண்மையின் சில அம்சங்கள் இச்சிறு கட்டுரையிற் கூறப்படும்.

### 1. ஏம கூடம்

கதிர்காம புராணத்து ஏமகூடப் படலம் கூறமுயலும் உண்மையை மேல் வருமாறு உய்த்துணரலாம். ஏமகூடம் என்பது பாசறை. குழந்தை வடிவேலர் சூரபன்மனை வதைக்கப் போர்க்களம் புகுதற்குப் பாசறை வகுத்திருந்த திருப்பதியே கதிர்காமம். வேற்பெருமான் படையுடன் வீற்றிருப்பதற்கான இப் பெரிய படைவீட்டைத் தேவதச்சனான மயன் மாணிக்க கங்கைக் கரையில் வகுத்தான். இப்படைவீட்டில் வேற்பெருமான் வீரவாகுத் தேவர் ஆதியோர் சூழ வீற்றிருத்தற்கான இரத்தின சிம்மாசனம் இட்ட மண்டபம் ஒன்றும் அவன் அமைத்தான். அதுவே கதிர்காமத்துக் கோயிலாகும். இங்கிருந்தே வேலைத் தூக்கி விளையாடும் பெருமான் போர்க்களம் சென்று சூரனைக் கிளையுடன் வதைத்தார். சூரனால் சிறைவைக்கப்பட்ட தேவரைச் சிறை மீட்டார். ஈற்றில் சூரபன்மன் உறைந்த மகேந்திர புரியையும் வருணனுக்கு இரையாக்கினார். ஆகவே, *கதிர்காமப் படை வீடானது அறுமுகச் சிவம் அடியவரது அஞ்ஞானமான சூரனை அழிப்பதற்கென குடிகொண்டிருக்கும் அருட்கோயில். அவர் தமது ஞானசத்தியான வேற்படையுடன் அஞ்ஞானத்தை அழிப்பேன் என்று விருது கட்டிக் கொண்டு இங்கு வீற்றிருக்கின்றார். அப்பெருமான் அடியவரைப் பிணித்திருக்கும் மலக் கொடும் பகையான தழையறுத்து விடுதலை (வீடுபேறு) அளிப்பார். அதனால் இத்தலத்தை நினைந்து நாம் பிரார்த்திப்பதற்கான நல்லதொரு பிரார்த்தனை மேல்வரும் நற்சிந்தனை.*

வேலைத் தூக்கி விளையாடும் தெய்வமே ~ என்
வினைப்பகை தீர் தெய்வமே.
காலைத் தூக்கி ஆடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத்தையனே கழலடி நம்பி வந்தேன்

இப்புராணத்திலே 'அபகீர்த்தி முத்திப்பேறு படலம்' ஆதிய சில படலங்களிலே கற்றற்கினிய கதைகள் பல உள்ளன. அக்கதைகளிலே வரும் அபகீர்த்தி ஆதிய மாந்தர்கள் கொடிய பாவகாரிகள். சித்திரகுப்தரது வினைக் கணக்கில் அவர்களது நல்வினைப் பகுதி ஒன்றுமே இருக்கவில்லை. அத்தகைய பாவியரும் கதிர்காமத் தரிசனத்தாலோ, கதிர்காம எல்லையைச் சேர்ந்ததாலோ குகதூதரால் யமதூதரிடமிருந்து விடுவிக்கப் பெற்றுக் கந்தபுரியையடைந்து சாமீப பதமடைந்தனர். ஏனெனில் அது ஏமகூடம். அதாவது எதிரிகள் புகாத பாசறை. அப்பாசறைக் காப்பரண்களில் வீரவாகு தேவரால் அமர்த்தப்பட்ட வீரர்கள் விளிப்புடன் காவல் புரிகின்றனர். அவர்கள் ஏமகூடத்தெல்லையிலும் எதிரிகளை வரவிடார். *ஆகவே, கதிர்காம தரிசனம் செய்தோர், கொல்வாரேனும், குணம் பல நன்மைகள் இல்லாரேனும், மந்தரம் அன்ன பாவங்கள் மேவியவரேனும், நரகம் ஏழ்புக நாடினராயினும், கடைத்தேறியவராவர்.*

### 2. சிந்தாமணிக் கோயில்

சிந்தாமணிக் கோயில் கதிரைமலை உச்சியிலுள்ளது. கதிரைமலை என்பது சோதி மலை என்னும் பொருள்பயப்பது. சூரசங்காரம் செய்துவந்த அறுமுகப் பெருமான் இச் சோதிமலையை உகந்தார். பெருமான் உகந்த இம்மலையிலே தேவதச்சனான மயன் சிந்தாமணிக் கோயிலை அமைத்தான். அசுரரால் அளவில்லாத துன்பங்களை அனுபவித்த தேவர்கள், அத்துன்பங்களினின்றும் நீங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தத்தாலே பெருமானைப் பூசிக்க நாடினர். வீரவாகுதேவர் தமது தண்டாயுதத்தினாலே அம்மலையில் நவகுண்டங்களை உண்டாக்கினார். அக்குண்டங்களில் கங்காதேவி பொங்கி நிறைந்தார். அப்புனித கங்கா தீர்த்தத்தையும், மற்றும் பூசனைப் பொருட்களையும் கொண்டு தேவர்கள் பூசித்து இன்புற்றனர். அவர்கள் தம்போன்று இத்தலத்துக்கு வந்து பூசனை புரிவோரெல்லாம் சுகம்பெற வேண்டும் என வேண்டுதல் செய்தனர். அருட்பரானந்த வாரியான அறுமுக வேலவரும் அவ்வாறே ஆகுக என்று அருள் பாலித்தார்.

இனி, இச்சோதிமலையினையும் இங்குள்ள சிந்தாமணிக் கோயிலிலே, ஆனந்த தாண்டவம் புரிந்திருக்கும் கதிர்காம வேலவரையும், இத்தாண்டவத்தைத் தரிசிக்கும் சீரான அடியவரையும் சிறப்பித்துக்கூறும் கதிர்காம புராண வசனத்துக் கதிர்காம மான்மியப் படலத்திலுள்ள ஒரு பகுதி மேல்வருமாறு:

“அம்மலைச் சிகர நடுவில் அநேக கோடி சூரியப் பிரகாசம் பொருந்தி இலங்கும் சிந்தாமணி ஆலயத்தில் நவரத்தினமயமான சிங்காசனத்தில் வள்ளிநாயகியார் தெய்வானையம்மையார் சமேதராய் அநேககோடி சூரியப் பிரகாசத்தோடு கதிர்காம கிரீசர் எழுந்தருளியிருக்கிறார். அம்மலையில் விநாயகரும் விநாயக கணத்தாரும் சாத்தாவும் அவர் கணத்தாரும், வீரபத்திரரும் அவர் கணத்தினரும், வைரவரும் அவர் கணங்களும், காலாக்கினி ருத்ரரும் அவர் கணங்களும், வீரவாகுவும் அவரடைய கணத்தாரும், அயன் மால் உருத்திரன் சரசுவதி, இலக்குமி, உமை, இந்திரன், இந்திராணி, முப்பத்து முக்கோடி தேவர்கள், அட்டவசுக்கள், மருத்துவர், நட்சத்திரங்கள், கிரகங்கள், கந்தருவர், அரம்பையர், சித்தர், சாரணர்...... சனகர் முதலான யோகியர் நவசித்தர்கள் ஆகிய யாவரும் எப்பொழுதும் <u>சுப்பிரமணியப் பெருமானுடைய ஆனந்த தாண்டவ தரிசனம் செய்துகொண்டு ஆனந்தக் கடலிலாழ்ந்து கசிந்துருகும் உள்ளத்தவராய் மெய்யன்போடு வசிக்கின்றனர். ............ அம்மலை சுப்பிரமணியக் கடவுளுடைய வடிவமாய் மங்கலம் பொருந்தி விளங்குகின்றது.</u>”

கோடிட்ட பகுதியிலுள்ள வண்ணம் கதிரைமலையானின் ஆனந்த நடனத்தைத் தரிசித்துக் களிவெறிகொண்டு தாமும் இசைந்தாடும் பாக்கியம் பெற்றோர் இன்றும் உள்ளனர் என்பது முக்காலும் சத்தியம்.

“செவிகளுக்கு அமுதம் பொழிவதை ஒத்த இனிய கதை” என்ற பீடிகையுடன் தொடங்கும் இப்புராணத்திலுள்ள கதையொன்றையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். இக்கதை தேவர்கலிவென்ற படலத்தில் உளது.

“முன்னொரு காலத்தில் பிரமா முதலான தேவர் யாவரும் கைலை மலையை அடைந்து சிவபெருமானை வணங்கி ஒரு விண்ணப்பம் செய்வாராயினார். ‘தேவாதி தேவா! லோகநாயகா! படைத்தல் முதலாய முத்தொழில்களையும் புரியும் பதிப்பொருளே! கிருதயுகம் திரேதாயுகம், துவாபரயுகம் என்னும் மூன்று யுகங்களிலும் மூவுலகங்களிலும் வாசம் செய்திருக்கிறோம். இப்பொழுது முன்னே மனைவியும், பின்னே சுமைசுமந்து கொண்டு பெற்றதாயும் வர இவ்வுலகத்திலே கலிராசன் வந்துவிட்டான். பிருதிவி வீரியமற்று, ஓசதி பலமில்லாததாயிருக்கிறது. நீசர் பெருமை பெற்று விளங்குகின்றனர். அரசர் குடிகளது பொருளைப் பறித்தலிலேயே எப்பொழுதும் கருத்தாயிருக்கின்றனர். பிராமணர் தமக்குரிய கர்மங்களை இழந்து விபரீத கர்மங்களைச் செய்பவராயிருக்கின்றனர். மனையாள் தன் கணவன் மேல் மிக வைரங்கொண்ட சித்தமுள்ளவளாயிருக்கிறாள். மைந்தர் பிதாவை நிந்திப்பவராயினர். இப்படிப்பலவிதமான மாறுபாடு கொண்டு விளங்கும் இக்கலியுகத்திலே தருமம் காடு போய் ஒளித்துவிட்டது. ஆதலால் இனி நாங்கள் எங்கே செல்லக் கடவோம்? இக்கலியில் நாங்கள் கலிவலியில் அகப்படாமல் தப்பி வாழத்தக்க ஒரு புண்ணியத் தலத்தை வகுத்தருளல் வேண்டும்’ என்று இரந்தனர். அவர்களது வேண்டுகோளைக் கேட்ட சிவ்பெருமான் ‘தேவர்களே! நம்பிரிய குமாரனாகிய சுப்பிரமணிய மூர்த்திக்கு உரிய தலங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் மிக உத்தமமானதும் அவன் எப்பொழுதும் விட்டு நீங்காமல் வசிக்கப்பெற்றதும், அவனுக்கு மிக உவப்புடையதுமான கதிர்காமம் என்னும் மலை ஒன்றிருக்கிறது. அம்மலையின் பக்கத்திலே மிக்க இன்பத்தை விளைவிப்பதும், கதிர்காமம் என யாவராலும் புகழப்படுவதும், எமக்கும் மிகப் பிரியமான தலம் ஒன்றிருக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. கலி மன்னனும், நோய்களும், யமனும் அத்தலத்தை அடைவதில்லை. அங்கு வசிப்போரைப் பாவங்கள் சென்றடையா. வசிக்கப்பெறுவோர் பெரும் புண்ணிய முடையோர். ஆதலால் நீங்கள் எல்லீரும் அங்கே சென்று முனிவரோடு சுகமாய் வாசம் செய்யக் கடவீர்கள்' என்று அருளிச் செய்தார்.''

இவ்வாறான இனிய கதைகளைக் கொண்ட கதிர்காம புராணமானது மாணிக்ககங்கைக் கரையில் பரமரகசியமாயிருந்து கொண்டே பகிரங்கமான அருளாடல் நடத்தும் பரமகுருவையும், கதிரைமலையுச்சியிலே காணக் கண்படைத்தவர்களால் கண்டின்புறத்தக்க சிந்தாமணிக் கோயிலில் திருநடம் புரியும் கதிரைமலையானையும் தரிசித்துப் போற்றி வழிபடும் தாகத்தை ஆக்கி அப்பெருமானது அருள்வெள்ளத்துள் திளைத்து இன்புறும் பெருவாழ்வு வாழத்தூண்டுவது. இப்படி இன்னும் அநேக கதைகளும் இனிய பாடல்களும் அண்மைக்கால உண்மைச் சம்பவங்களும் உள. இவற்றை உணர்ந்து அக் கதிர்காமத்தலத்தையும், கதிர்காமத்தானையும் சிந்தையுட் கொண்டு நல்வாழ்வு வாழ்வோமாக.

கருத்திலிருக்கும் கதிர்காமத் தோனை
வருத்தமுற் றேன்தேடு கின்றாய் ~ திருத்தியுன்
சித்தமிசை நித்தம் திகழொளியைக் கண்டுருகி
முத்தனென வாழ முயல். —நற்சிந்தனை—

## சும்மா இரு

**கேள்வி:** 'மிஸ்டிக்' (Mystic) எனும் மேற்கத்திய ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளில், 'மிஸ்டிக் வழி'யின் வர்ணனை காணப்படுகிறது. (தியானத்தின் மூலம் சத்தியத்தையும் கடவுளையும் அறியலாம் எனக் கருதுபவர்கள் மிஸ்டிக் எனப்படுவர்). அதில் மூன்று தனிப்பட்ட நிலைகள் இருக்கின்றன. அவை சுத்திகரித்தல், பிரகாசித்தல், ஐக்கியம் என்பன. சுத்திகரித்தல் என்பது நமது சாதனை நிலையை ஒத்தது. பகவானுடைய வாழ்க்கையில் இது மாதிரியான நிலை ஏதாவது இருந்ததா?

**பகவான் இரமணர்:** அந்த மாதிரி நிலையொன்றும் எனக்குத் தெரியாது. நான் எந்த பிராணாயாமமோ ஜபமோ செய்ததில்லை. எனக்கு மந்திரமொன்றும் தெரியாது. தியானத்தின் அல்லது சிந்தனையின் விதிகளொன்றும் எனக்கிருக்கவில்லை. இவற்றைப் பற்றி எல்லாம் பின்னர் கேள்விப்பட நேரிட்டபோதும் எனக்கு அவற்றில் நாட்டம் ஒருபோதும் இருக்கவில்லை. இப்பொழுது கூட என் மனம் அவற்றில் கவனம் செலுத்த மறுக்கிறது. சாதனை என்றால் அடையவேண்டிய பொருளையும் அதை அடையும் வழியையும் குறிப்பிடுகிறது. நம்மிடம் ஏற்கனவே இல்லாதது எது உள்ளது, அதை அடைவதற்கு? தியானத்திலும், சிந்தனையிலும், ஒரு முனைப்படுத்தலிலும் நாம் செய்யவேண்டியதெல்லாம் எதையும் நினைக்காமல் அமைதியாக இருப்பதே. அப்போது நாம் நமது இயற்கை நிலையிலிருப்போம். இந்த இயற்கை நிலைக்கு அனேக நாமங்களுண்டு-மோக்ஷம், ஞானம், ஆன்மா முதலியவை. இவற்றால் அனேக கருத்து வேறுபாடுகள் எழும்புகின்றன. ஒரு சமயத்தில் நான் கண்களை மூடிக்கொண்டிருந்ததுண்டு. அப்பொழுது நான் சாதனை செய்து கொண்டிருந்தேன் என்று அதற்கு அர்த்தமல்ல. ஏதோ விரிவான சாதனையைச் செய்தால், ஒரு நாள் ஆன்மா என்று ஏதோ மிகப்பெரிய மகத்தான மகிமையுடன் கூடிய ஒன்று அவர்கள் மீது வந்திறங்குமென்றும், அப்பொழுது சாக்ஷாத்காரம் என்று சொல்லப்படுவதை அடையலாம் என்றும் ஜனங்கள் கருதுகிறார்களென்று தோன்றுகிறது. ஆன்மா, 'சாக்ஷாத்' என்பது சரியே. ஆனால் அதில் 'காரமோ' 'கிருதமோ' கிடையாது. 'காரம்' என்றாலே ஒருவர் ஏதாவது செய்வது. ஆன்மா, எந்தச் செய்கையினாலும் அடையப்படுவது அல்ல. எதுவும் செய்யாமல், அமைதி காத்து, உண்மையில் தான் எதுவோ, அதாக இருப்பது மாத்திரமே.

**(குர்ரம் சுப்பராமய்யா~ அருள்நிறை அமுதக்கடல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அருள்மொழிகளிலுள்ள உவமைகள்

*ஞானியர் உவமை, உபகதை, பழமொழி ஆதியவற்றினூடாக இலகுவாக உண்மை விளக்கம் செய்வது எங்கும் என்றுமுள்ளதோர் நடைமுறை. எங்கள் சுவாமிகளும் இவற்றைக் கையாண்டு தமது அநுபூதி நலத்தையும் அதனை அடையும் முறையையும் அன்பாளர்களுக்கு உணர்த்தியிருக்கிறார். இவற்றுள் எங்கள் ஆசான் அருள்மொழிகள் என்னும் நூலிலுள்ள உவமை மொழிகள் பற்றி எடுத்துரைப்பது இக்கட்டுரைத் தொடரின் நோக்கம்.*

*இத்திருநூலிலுள்ள உவமைகள் நூதனமானவை; நுணுக்கரிய நுண்ணுணர்வுகளைத் துலாம்பரமாகக் காட்டுவன; கேட்டாரை எளிதிற் பிணிப்பன; சாதித்துச் சாதித்து உள்ளே உள்ளே சென்று உண்மையை உணர்தற்கு உபகாரமாயமைவன. இவற்றைச் சாதித்துச் சுகிக்கும் சிவதொண்டர்கள் இச்சுருங்கிய உலகினில் ஆங்காங்கே அமைதியாக அடக்கமாக உறைகின்றனர். அவர்களுள் ஒருவர் எழுதியுதவியது இக்கட்டுரை. ஏனையோரும் இவ்வாறு எழுதியனுப்பினால் இத்தொடரில் அவற்றையும் இணைத்துக்கொள்ளலாம்.*

### 1. கிளுவந்தடியும் மழையும்

நாமெல்லாம் புனிதமடைதற்கான புண்ணியத்தலமே இப்புனிதமான பூமாதேவி. இப்புவி வாழ்வு நாம் புனிதமாவதற்கென்றே பெருமானால் தரப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வுலக வாழ்வை உவகையுடன் ஏற்று இயற்கையுடன் அளவளாவி வாழ்தல் முறை. ஆயினும் ஒன்றிலும் முட்டாமல் வாழ்தல் வேண்டும். முட்டிக்கொண்டால் அதிலேயே உழலவேண்டும்; உண்மை நெறியில் உயர்ந்தேற முடியாது. இவ்வுண்மையைச் சுவாமிகள் எளிதாக விளக்கும் இரு உவமைகள் மேல்வருவன:



''கிளுவந்தடியைப் பிடித்துக்கொண்டு நடப்பது போல் நடக்கவேண்டும்.''

''ஒருவன் மழையிலே நனையாமல் போகத் தெண்டிப்பது போல உலகில் நடமாட வேண்டும். மயக்க உணர்வுகளை உதறிவிடு; உன்னில் நீ நிலை.''

***கிளுவந்தடியைப் பிடித்துக்கொண்டு நடத்தலும் உலக விவகாரங்களில் விழிப்புடன் நடத்தலும***

கிளுவந்தடி உறுதியான தடி; அதில் உறுதியான முட்களும் உள்ளன. (யாழ்ப்பாணத்து வேலிகள் சில இன்றும் கிளுவந்தடியாலானவையாக உள்ளன. மதிற்சுவரினும் சிறந்ததென்றே கிளுவந்தடிவேலியைக் கூறுதல் வேண்டும்.) கிளுவந்தடியைப் பிடித்துக் கொண்டு நடப்பதற்கு மிக்க அவதானம் வேண்டும். அது வளவளப்பாகச் செய்யப்பட்ட ஊன்றுகோல் போல்வதன்று என்பது வெளிப்படை. அதனை உள்ளங்கையையும் சேர்த்து பொத்திப் பிடித்தல் இயலாது. முட்களுக்கிடையே விரல்களைச் செலுத்திப் பிடித்துக் கொள்ளலாம். கவனமாகப் பிடிக்காவிட்டால் முள் குத்திக் காயம் ஏற்படும். பாதையில் மேடும் பள்ளமுமிருப்பின் மேலும் சிரமமாயிருக்கும். இவற்றுக்கெல்லாம் 'கராட்டி' வீரன் விரலிற் பலத்தைக் குவிப்பது போன்றவோர் திறமை வேண்டும். இத்திறமையிருப்பின் முள்ளினால் காயம் ஏற்படாது நிதானமாக நடந்து செல்ல முடியும். நமக்கென்று பொருந்திய உலக வாழ்க்கை ரமணமகரிஷிகள் பிடித்து நடந்த ஊன்றுகோல் போல்வதன்று, கிளுவந்தடி போன்றதொன்றே நமக்குப் பொருந்திய உலக வாழ்வு. இவ்வாழ்விலே பற்றுதலும் பற்றுதலால் வரும் வில்லங்கங்களும் ஆதிய உறுதியான கூரிய முட்கள் நெருக்கமாயுள்ளன. ஆழப்பாயும் இம் முட்களால் காயப்படாதிருத்தல் மிகச் சிரமமே. தருமநெறி தவறாது வாழ்வதால் ஒருவாறு இம்மனக் காயங்களால் சஞ்சலப்படாது உண்மை நெறியில் உயர்ந் தேறலாம். ஆயின் சடுதியாய் ஏற்படும் அதிர்ச்சி தரும் சம்பவங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பரபரப்புற்று நெறிபிறழ்ந்து இம்முட்களிலே கையைப் பதிக்கவேண்டி நேரிடும். கராட்டி வீரன் சக்தியை விரல்களிற் குவிப்பது போன்று ஆன்ம சக்தி பொருந்துமாயின் விவகாரங்களால் தாக்குறாது உல்லாசமாக நடந்து உண்மைநெறியில் உயர்ந்தேறலாம்.

**மழையில் நனையாமற் செல்லலும் உலகில் முட்டாது வாழ்தலும்.**

நாம் மழையில் நனையாமல் செல்வதற்குத் தெண்டிக்கும் வழிகள் பல உள்ளன. மழை வருமுன் செல்லல், மழைக்கு ஒதுங்கி மழை விட்ட பின் செல்தல் என்பன நாம் இங்கு கருத்திற் கொள்ள வேண்டியன அல்ல. மழைபெய்யும் போதே செல்லவேண்டிய நிலையே கருத்திற் கொள்ள வேண்டியது. நாம் உலக வாழ்வினின்றும் ஓடி ஒதுங்க முடியாது. விதிவசத்தாற் பொருந்திய உலக வாழ்க்கையை உவகையுடன் ஏற்று நடாத்துதல் வேண்டும். மழைத்துளிக்கு விலத்தும் சுழியன்மார் சிலர் உலகவிவகாரங்களிலும் சுழித்துச் செல்வர். ஆயின் இது நெறியல்லா நெறி. நாம் நெறிவழியிலேயே செல்லல் வேண்டும். மழைபெய்யும் பொழுது நாம் குடையை விரித்துப் பிடித்துச் செல்வது போன்று நம் ஆத்மபலத்தை துணைக்கொண்டு விவகாரங்களில் முட்டாது வாழ முனைதல் வேண்டும். '**நாம் அது**' என்னும் ஞானமே நமக்கு உகந்த நல்லகுடை. அது நம் அகத்திலிருந்து உதிக்கும் ஆற்றல். பறவைகள் மழையில் நனையாதிருக்கும் பொருட்டு நீரில் நனைந்து உடலிலுள்ள கொழுப்பினைக் கோதி இறக்கைகளில் படியச்செய்வது போன்றதோர் தந்திரம். இந்த ஆன்ம சக்தியாகிய குடையைப் பிடித்துச் சென்றால் வாழ்க்கையின் மாயாவிகார மழைத்துளிகள் வீழ்ந்தாலும் அவற்றை இலகுவாக உதறி உகுத்துவிடலாம். சுவாமிகள் இவ்வுவமையால் எளிதாக உணர்த்த நாடிய இவ்வுண்மை அடுத்துவரும் உறுதிமொழிகளில் திடம்படக் கூறப்பெற்றிருக்கிறது.

"மயக்க உணர்வுகளை உதறிவிடு. உன்னில் நீ நிலை. உன்னை நீ நம்பு."

'நாம் கேடும் ஆக்கமும் கெட்ட திருவினனான உண்மைப் பொருள். இறப்புப் பிறப்பு ஆகிய தோன்றி மறையும் பொய்மைகளால் தாக்குறாத நித்திய வஸ்து என்ற எமது உண்மை நிலையை நம்பி அவ்வுண்மையில் நிலைத்தலே ஆன்மநெறியிற் செல்லும் எமக்கு உகந்த குடை' என்பதே சுவாமிகள் இவ்வுமையால் உணர்த்தும் உயர் ஞான சாதனை எனத் தெரிகிறது.

## அருள் தாகம்

ஒரு சீடன் தன் குருவிடஞ் சென்று "சுவாமி! தமியனேற்கு ஞானம் புகட்டுதல் வேண்டும்" என்றான். குரு அந்த இளைஞனை நோக்கி எப்பதிலும் கூறாமல் உதட்டுக்குட் புன்னகை செய்து வாளா இருந்தார். இளைஞன் அடுத்தடுத்து அவரிடம் சென்று தன் வேண்டுகோளைச் சமர்ப்பித்து வந்தான்; மிக வற்புறுத்தியும் வேண்டிக் கொண்டான். ஆயின் சீடனது நிலைமையைக் குரு நன்றாக அறிவார். ஒரு நாள் வெப்பமிகுதியான நண்பகற் போதில் பெரியார் இளைஞனை ஆற்றில் நீராட வருமாறு அழைத்தார். அவனும் உடன்பட்டுச் சென்றான். ஆற்றில் இறங்கி முழுகினான். பெரியாரும் ஆற்றில் இறங்கி இளைஞனை நீருள் அமுக்கிப் பிடித்துக் கொண்டார். சிறிது நேரத்தில் அவன் மூச்சு வாங்க முடியாமற் கிடந்து தத்தளித்த போது கையை விட்டார். அவன் நீருக்கு வெளியே வந்து மூச்சு வாங்கிக் கொண்ட பின் "நீ நீருள் இருந்து தத்தளித்த போது எது தேவையாயிருந்தது?" எனக் கேட்டார் பெரியார். சுவாசிப்பதற்குக் காற்றுத் தேவையாயிருந்தது என்றான் இளைஞன் "அஃதே போல, நீ கடவுளை அறிதற்கும் ஆவல் கொள்ளுவையேல் அவரை அடைவாய்" என்று பதிலிறுத்தார் பெரியார். இத்தகைய அருட்டாகம் இல்லாமையாலேயே நாம் அந்த அருளைத் துய்க்காமலிருக்கின்றோம். பொன்னை, மாதரைப் பூமியைப் போற்றுகின்றோமேயன்றி இறைவனைப் போற்றுகின்றிலோம். இப்பொருட்களின் மீதுள்ள தாகம் ஒழிந்து இறையருட்டாகம் ஏற்பட்ட அன்றே நாம் உய்தி நெறி கடைப்பிடித்தவராவோம். அற்றேல் உலகம் முழுவதும் பெற்றும் இறையருள் பெற்றிலோமாயின் அநித்தியத்தைப் பற்றி நித்தியத்தைக் கைவிடும் கசடராவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்குருபர புங்கவ சிங்கமே

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
தானா யெங்குஞ் செறிந்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி னாசையை நீக்கிட வேண்டுமே
கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே
என்கு ருபர! புங்கவ சிங்கமே! 1

கசடு தீரத்தறங் கற்றிட வேண்டுமே
கல்வி யாற்பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடிதொழ வேண்டுமே
நிசசொ ரூபம றிந்திட வேண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குருபர!
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே! 2

மூன்று மொன்றாய் முடிந்திட வேண்டுமே
முனையின் வாசல் திறந்திட வேண்டுமே
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
உள்ளே யானந்தம் பொங்கிட வேண்டுமே
தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே
தூய நிர்க்குண அற்புத பொற்பதம்
ஈண்டு தந்த இனிய குருபர!
என்னை யாண்டவ! இங்கித சிங்கமே! 3

இருளை நீக்கி இருந்திட வேண்டுமே
எங்குந் தெய்வத்தைக் கண்டிட வேண்டுமே
பொருள றிந்தினிப் போற்றிட வேண்டுமே
பொய்ய முக்கா றகற்றிட வேண்டுமே
மருளைத் தந்து மயக்கும் பொருள்களை
மாற்றி யேயரு ளாக்கிட வேண்டுமே
பெருமை யிற்பிறர் பேசுங் குருபர!
பெத்த னென்னையும் பேணிய சிங்கமே! 4

அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே
ஆண வத்தை ஒழித்திடல் வேண்டுமே
இஞ்சி சூழும் இலங்கையி லிராவணன்
ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே!
நஞ்சு கண்டத்திற் கொண்டவ! நம்பனே!
நம்மை யாளுவான் நண்ணும் முதல்வனே!
பஞ்சின் மெல்லடிப் பரம குருபர!
பாவி யேனையு மாட்கொண்ட சிங்கமே! 5

சுவாமிகள் இச் செய்யுளினாலே தன்னைத் தன்னாலறிந்து தானேதானாய் தனித்திருக்கும் திருவடியின்பத்தைத் தன் சொந்தக் குருமணியிடம் வேண்டுகிறார். சுவாமிகள் தன்னையறிந்த தலைவர். அவருக்குக் குருபரன் சகலசம்பத்தையும் அருளிவிட்டார். ஆதலால் அவர் தன் பொருட்டு வேண்டுதற்கேதுமில்லை. அவர் நம்பொருட்டே இவ்வேண்டுதலைச் செய்கிறார். நாம் வேண்டத்தக்கதறியோம்: வேண்டும் பரிசும் அறியோம். சுவாமிகள் இவற்றை அறிவார். ஆதலால் சுவாமிகளின் இவ் வேண்டுதல் நமக்குகந்த வேண்டுதலாம். இவ்வாசகத்தை நினைந்து வேண்டுதல் நல்ல வேண்டுதல்.

**1. தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே:**

திருவடியைச் சார்ந்து திருவடி நினைவாயிருக்கும் தன் உண்மை நிலையைத் தன்னாலே அறிந்திட வேண்டும். தன்னைப் புலனறிவு. புத்தி, மனம், சித்தம் என்பன அறியமாட்டா. இவையெல்லாம் தலைகவிழ்ந்து தான் தலையெடுத்தவிடத்தேதான் தன்னை அறிதல் இயலும். அறிதல் என்பதற்கே இடமில்லாது அது அறிவு மயமாகவே இருப்பதால் இயல்பாகவே தன்னையுணரறிவு தலைப்படும். சற்குரு தரிசனம் எனும் கீதத்தில் **தான் தன்னை அறியுமே** என்றிருத்தலையும் இதனுடன் இணைத்து நோக்குதல் நன்று.

**தானாய் எங்கும் செறிந்திடல் வேண்டுமே:**

தான் எங்கும் செறிந்திருப்பதை உணர்ந்து அச் செறிந்த நிலையில் நிற்றல் வேண்டும். தான் சுட்டிறந்து நிற்பதொன்று. அது சுட்டியறியப்படும் தேகத்தளவினதன்று. அது தேசகாலங் கடந்து எங்கும் என்றும் உள்ள நித்தியப் பொருள்.

**பொன்னை 'மாதரைப் போக்கிட வேண்டுமே. புவியின் ஆசையை நீக்கிட வேண்டுமே:**

பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை எனும் மூவித ஆசைகள் தானான தன்மைக்குச் சார்பில்லாதன. ஆதலால் குருராச சிங்கமே இவ்வாசைகளைப் போக்கிவிட வேண்டும்.

**கண்ணைப் போல் அறம் காத்திட வேண்டுமே:**

தன்னிலையில் தரித்திருத்தற்கு நெறிப்படுத்துவது தருமம். அது ஆசைவழிப் போகாது. தன் உண்மையில் நிலைத்திருக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வது. அத்தருமத்தைக் கண்ணை இமை காப்பதுபோல் காத்தற்கு அருள் புரிய வேண்டும்.

**கமலபாதம் தொழுதிடல் வேண்டுமே:**

(குருராச சிங்கமே) தனக்குச் சார்பல்லாத ஆசைவழிபோய் மோசம் போகாது தனக்குச் சார்பான மலர்ப்பதத்தை மறவாது நினைந்துதொழுது வணங்குதற்குக் கிருபை புரிதல் வேண்டும்.

**எண்ணம் யாவும் இறந்திட வேண்டுமே:**

வீண் பாவனையான மன நினைவுகள் யாவும் ஒழிந்துபோக வேண்டும். அடியேன் எண்ணமெல்லாம் விட்டு ஏகாந்த மோன நிலையில் நிற்றல் வேண்டும்.

**2. அயல் உனக்கில்லை என்ற குருபர ஆண்மை விஞ்சிடும் அற்புத சிங்கமே:**

உண்மையான உனக்கு அயலாக ஏதுமில்லை என்று எனக்கு உபதேசித்த குருபர. (அயல் எதுகை நோக்கி அசல் என நின்றது) அயலறியாத செந்தண்மை பூண்ட செல்வனாய் ஏதுமொன்றற நின்று கொண்டே அதிசயங்கள் அநேகம் எல்லாம் காட்டும் அற்புத மாவீரனே!

**கசடு தீர்த்து அறங்கற்றிட வேண்டுமே:**

திருவடியிலே தரித்திருத்தற்கான தருமநெறியை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிதல் வேண்டும்.

**கல்வியாற் பயன் பெற்றிடல் வேண்டுமே:**

அக்கல்வி ஏட்டுக் கல்வியாயமையாமல் கற்றதன்படி நிற்றல் வேண்டும்.

**அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே:**

இந்த உண்மைக் கல்வியைக் கற்காத அறிவில்லாதவரின் உறவை விட்டு விடுதல் வேண்டும். (அசடர்-அறிவில்லாதவர்)

**அந்தி சந்தி அடிதொழல் வேண்டுமே:**

திருவடியே திரமிது பொருளெனக் கற்றறிந்த வண்ணம் அத்திருவடியைக் காலை, மாலை, உச்சிப் பொழுதுகளில் மனமொழி மெய்களாற் கும்பிடுதற்கு அருள் புரிதல் வேண்டும். (இது சாதனையான கும்பிடுதல்)

**நிசசொரூப மறிந்திட வேண்டுமே:**

இவ்வாறு பூசனை புரிந்த பூசா பலத்தினாலே நமது உண்மைச் சொரூபமான தன்னிலையை உணர்தல் வேண்டும். (நிசம்-உண்மை, சொரூபம்-உருவ அருவம் அருவுருவம் என்னும் கட்டுக்கள் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் சுட்டிறந்த சிவசோதி).

**நீங்காதென்றும் இருந்திட வேண்டுமே:**

அந்த நிசசொரூபத்திலே நிலைத்திருத்தல் வேண்டும். அதாவது நிருமல நிட்டை கூடுதல் வேண்டும்.

**3. தூய நிர்க்குண அற்புத பொற்பதம் ஈண்டு தந்த இனிய குருபர:**

நிருமலமானதும் நிர்க்குணமானதும், அற்புதமானதுமான பெறற்கரிதாம் திருவடி இன்பத்தை இந்த மாய உலகிலே, குணங்குறியுள்ள உடலோடிருக்கும் போதே அருளிய இன்பசாகரமோன வடிவான குருபரனே!

**என்னை ஆண்டவ இங்கித சிங்கமே:**

என்னை ஆட்கொண்டருளிய என் தலைவனே! என் பிறவித் துன்பம் போக்கி திருவடி இன்பம் தந்த வீரியனே!

**மூன்றும் ஒன்றாய் முடிந்திட வேண்டுமே:**

காண்பான், காட்சி, காட்சிப் பொருள் எனும் மூன்றாகக் காணும் அஞ்ஞானம் முடிந்து ஒன்றாகக் காணும் மெய்ஞானக் காட்சியை அருள வேண்டும்.

**முனையின் வாசல் திறந்திட வேண்டுமே:**

உடல் இயக்கத்துக்குக் காரணமான இடைபிங்கலை என்னும் இரு வழியையும் அடைத்துத் தன்னிலையை உணர்தற்கான சுழுமுனை வாயில் திறந்திடக் கிருபை புரிதல் வேண்டும்.

**ஊன்றுபாதத் துறங்கிட வேண்டுமே. உள்ளே ஆனந்தம் பொங்கிட வேண்டுமே:**

மறைத்தலை நிகழ்த்தும் ஊன்றிய பாதத்தில் உறங்குவதாகிய சுழுத்தி நிலையில் பொருந்துதல் வேண்டும். இவ்வாறு பொருந்தி இதற்கும் உள்ளே துரியத்தில் இருந்து பொங்கிவரும் அமுதத்தை அருந்தி ஆனந்தமுறுதல் வேண்டும்.

**தூண்டுசோதி சுடர்விட வேண்டும்:**

இதற்கும் அப்பால் துரியாதீதத்தில் சுடர்விடும் 'சிவசோதி'யைக் கண்டு உபசாந்த முறுதல் வேண்டும்.

**4. பெருமை இல் பிறர் பேசும் குருபர:**

பிறரெல்லாம் பெருமையில்லாத வார்த்தைகளைப் பேசும் வண்ணம் பித்தனாய் நடமாடிய குருபர!

**பெத்தன் என்னையும் பேணிய சிங்கமே:**

மலபந்தத்துட் கட்டுண்டு கிடந்த எளியனான என்னை முத்தனாக்கிய வீரனே! (பெத்தன்-மலத்தாற் பிணிப்புண்டவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இருளை நீக்கி இருந்திட வேண்டுமே:***

ஒன்றேயான தெய்வத்தை மூடிமறைத்துப் பலபல விசித்திரக் கோலங்களைக் காட்டும் மாயவிருளை அகற்றி அவன் இவனென்ற வகையின்றி இருக்க அருள்புரிக.

***எங்கும் தெய்வத்தைக் கண்டிடல் வேண்டுமே:***

எவ்விடத்தும் எல்லாரிடத்தும் உள்ள மெய்ப்பொருளாகிய தெய்வமொன்றையே பார்த்திருக்கும் பாக்கியத்தை அருள்க.

***பொருள் அறிந்தினிப் போற்றிட வேண்டுமே:***

கண்டனவெல்லாம் மோன உருவெளியான மெய்ப்பொருளே என அறிந்து அம் மெய்ப்பொருளை அஞ்சலித்திருத்தல் வேண்டும்.

***பொய் அழுக்காறு அகற்றிட வேண்டுமே:***

மூடிய மாயவிருள் காட்டும் பொய்க்கோலங்களை மெய்யென மயங்குதலால் அக்கோலங்களைச் சார்ந்து எழும் அழுக்காறு அவா வெகுளி ஆதிய மன அழுக்குகளை அகற்றுதல் வேண்டும்.

***மருளைத் தந்து மயக்கும் பொருள்களை மாற்றியே அருளாக்கிட வேண்டுமே:***

ஓரொருபோது மாயாசாலப் பொருட்களின் பொய்க்கோலங்களில் மயங்காதிருந்தாலும் அவை மீட்டும் மீட்டும் மருட்டி மயக்குகின்றனவே! வலிந்து கவரும் அவற்றின் கவர்ச்சியில் மருண்டு மயங்க வேண்டி நேரிடுகின்றதே! என் ஆண்மைவிஞ்சிடும் அற்புதக் குருபுங்கவ சிங்கமே! அம் மயக்கும் கோலங்களை அருட் கோலங்களாக மாற்றி அருளின் அவற்றுள் அருள்வடிவான ஆண்டவனையே கண்டு ஆறியிருப்பேனே! பெரியவ! மருளைத்தந்து மயக்கும் பொருள்களை மாற்றி அருட் கோலங்களாக்கி அருள்க.

***5. இஞ்சி சூழும் இலங்கையில் இராவணன் ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே!:***

மதில் சூழ்ந்த இலங்காபுரிக்கு இறைவனான இராவணன் சாமகானம் பாடி வழிபட்ட கயிலைக்கு இறையே! (இராவணன், ஆணவாகாரத்தின் அம்சம். அவன் மலையுள் நெரியுண்டு ஆணவம் அழிந்து அழுது பாடி அருள்பெற்றான். அவ்வண்ணமே அடியேனும் எங்கும் செறிந்திருக்கும் தானான தன்மையைச் சுருக்கி அணுவாகக் காட்டும் ஆணவத்தை அகற்றித் தானான தன்மையில் நிலைத்து திருவடியிணையைப் பாடிப்பரவி இருக்க அருள் புரிவாயாக என்னும் குறிப்புடைய விளி)

***நஞ்சுகண்டத்திற் கொண்டவ நம்பனே:***

விடமுண்ட கண்டனே! அமுதத்துடன் எழுந்த ஆலகால விடத்தினை உண்டு கண்டத்தே வைத்த சிவனே! (தன்னை அறிந்து சுகிக்கும் அமுத சுகத்துக்குத் தடையாயெழும் மாயாவிகார விஷ நினைவுகளைப் போக்குபவர் என்னும் குறிப்பினது.)

***நம்மை ஆளுவான் நண்ணும் முதல்வனே!:***

என்னை எனக்கு அறிவித்து ஆட்கொள்ளும் பொருட்டுக் குருவடிவாக எழுந்தருளி வந்த சிவபெருமானே! (குருவாகி வந்த குறிப்பைக் குறைவின்றிச் செய்வார் என்னும் குறிப்பினது)

***பஞ்சின் மெல்லடிப் பரம குருபர!:***

பஞ்சுபோன்ற மென்மையான திருப்பாதத்தையுடைய பரம்பொருளே! (இத்திருப்பாதம் அம்மையின் பாதத்தை உணர்த்துவது அம்மை அருள்வடிவானவர். ஆதலால் அருள்வடிவான திருவடி எனும் பொருள் பயப்பது.)

***பாவியேனையும் பணிகொண்ட சிங்கமே!:***

பாவியனான என்னையும் ஓர் அடியவனாக ஆட்கொண்டு சிவதொண்டு செய்யும் தொழும்பனாக்கிய சுதந்திரனே!

***அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே:***

அஞ்செழுத்துப் பொருளாயும், மூன்றெழுத்தாலான பிரணவப் பொருளாயுமுள்ள நினது மூல மந்திர உண்மையை ஓதியோதி உணர்ந்துணர்ந்து உபசாந்த முறுதல் வேண்டும்.

***ஆணவத்தை அழித்திடல் வேண்டுமே:***

தன்னை யறிதற்குத் தடையாய் இறுதிவரை முனைந்து நிற்கும் ஆணவ அரக்கனை அடியோடு அழித்துவிடல் வேண்டும்.

இப் பாட்டின் மூன்றாம் செய்யுள் மூன்று எனத் தொடங்குகின்றது. ஐந்தாம் செய்யுள் அஞ்சு எனத் தொடங்குகின்றது. இது இச் செய்யுள்களைத் தொடராய் மனனம் செய்து வைத்தற்கான ஒரு நுட்பம் ஆகும். அன்பர்கள் ஐந்து செய்யுட்களையும் மனனம் செய்து சிந்தித்துச் சிந்தித்துத் தன்னையறியும் பெரும் பேறை அடைய வேண்டும். என்னும் அருளாலேயே இந் நற்சிந்தனையைச் சுவாமிகள் அருளினராதல் வேண்டும் ஆதலினால் இந் நற்சிந்தனையைப் பத்தி சிரத்தையோடு ஓதி உணர முயல்வோமாக.

-தன்னையறிதலே சற்குருபூசை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேக சூடாமணி

(சாரம்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

200. 201. வித்தின் முளைபோல், சூக்குமமாயிருப்பதொன்று, தோற்றக் காட்சிக் கெளிதன்றாயினும், அழியுந்தன்மையையுடையது. அது போலச் சீவனாந் தன்மையும் புத்தி தத்துவங்களின் சார்போடு ஆன்மாவுக்குள்ளிருக்கும் ஒன்றெனக் கணிக்கப்படினும், அது மெய்ப் பொருளல்ல. ஆன்மாவோ, சீவனாந் தன்மையினின்றும் வேறுபட்டவொன்று. ஆன்மாவுக்கும் புத்தி தத்துவத்திற்கும் தொடர்பைக் கூறுதல் ஒரு மயக்கத்தால் வரும் பிறழ்வுணர்ச்சியேயாம்.

202. இந்த வஞ்சவுணர்ச்சியை ஞான வாயிலாகவன்றி வேறு வழிகளால் ஒழிக்க முடியாது. பரப்பிரமமும் சீவனும் அத்துவிதமாம் என்றறிந்த உணர்வே மெய்ஞ்ஞானமென நூல்கள் கூறுகின்றன.

203. இந்த உணர்வும் சடம் சித்து என்ற இருவகைப் பொருள்களின் தன்மைகளைப் பகுத்தறியுங்கால் வரும் நல்லறிவேயாம். ஆதலின் என்றுமழியாது நிலைக்கும் சித்தின் தன்மையையும் சீவனாந் தன்மையையும் அறியும் விவேகத்தையே ஒருவன் பெற முயலல் வேண்டும்.

204. எவ்வாறு கலங்கிய சேற்றுநீர் தெளிந்தபின் கலக்கமின்றிய நன்னீராகத் தோற்றுமோ, அவ்வாறே ஆன்மாவும் தன்னைப் பற்றிய (பரிசதோடம்) கறைநீங்கியவுடன் தன்னியல்பான தூய பிரமையுடன் விளங்கும்.

205. இவ்வாறு சங்கற்ப மாத்திரையானே வந்த கறை நீங்கியவுடன் சீவனாந்தன்மையையுடையதென எண்ணப்பட்ட ஆன்மாவே பரமான்மாவாக விளங்கக் காணலாம். ஆதலால் மாணவனே! சங்கற்பங்களும் அகங்கார மமகாரங்களும் இப்பரமான்மாவினின்றும் வேறானவை என்பதை உணர்ந்துகொள்.

206. நாம் முன்கூறிய விஞ்ஞானமய கோசமோ ஆன்மாவுமல்ல; விகாரப்படுவதாய, உணர்வற்ற சடமாய, கண்டிக்கப்பட்டதாய, புலன்களாலறியப்படுவதாய், என்று முடனுறைவதொன்றன்றாதலின் அதனை எவ்வாறு நிலையுள்ள ஆன்மாவிற்கு ஒப்பிடலாம்?

### ஆனந்தமய கோசம்

207. இன்ப வடிவினனும் ஏகனுமான ஆன்மாவின் சுயம்பிரகாசத்தின் பிரதிவிம்பத்தினின்றும் தோன்றும் ஓர் அஞ்ஞானரூப பரிவர்த்தனமே ஆனந்தமய கோசமெனப்படும். இன்பமடைதலே இதன் குணம். மனத்திற் குடன்பாடாகிய ஒரு பொருளை ஒருவன் தியானிக்குங்கால் இதன் உருவெளித் தோற்றத்தைப் பெறுவான். சன்மார்க்க நெறி பிடித் தொழுகுவானொருவனுக்கு அவன் பக்குவம் நோக்கி இதுதானே வெளிப்படும். இதன் துணை கொண்டே சடப்பொருள்களும் தமக்குரிய இன்பத்தைப் பெறுவன.

208. சுழுத்தி நிலையின் கண்ணேதான், ஆனந்தமய கோசத்தின் முழுலீலையும் விளங்கும். சாக்கிர சொப்பனங்களிலோ நல்ல பொருள்களின் பார்வையாலும் நல்லெண்ணங்களின் தியானத்தினாலும் மாத்திரமே சிறுக வெளிப்பட்டுத் தோன்றும்.

209. இனி, இந்த ஆனந்தமய கோசந்தானும் ஆன்மாவல்ல. இதுவும் விகார வேறுபாடுகளையுடையது. மாயையின் சார்பானது. நல்வினையின் காரியமாயது. மற்றும் அழியும் குணம் வாய்ந்த கோசங்களினூடே கிடக்கின்றது.

210. இவ்வாறே பஞ்ச கோசங்களையும் நியதிகளைந்து அப்பால் சிந்தையுமெட்டாச் சேணிடைச் சென்றால் ஆனந்த வறிவுருவமாய் இவற்றிற்கெல்லாம் சாட்சியாய் விளங்கி நிற்கும் ஆன்மாவைக் காணலாம்.

211. மூவா விளநலத்தோடு மலரகிதனாய், விகாரமற்றவனாய், உண்மைப் பொருளானவனாய், முக்குணங்களுடனிருந்தும் அவற்றின் வயப்படாதவனாய், பஞ்சகோசங்களின் வேறானவனாயுள்ளவனும், சுயம்பிரகாசனுமான ஆன்மாவைத்தான் ஒரு ஞானி தானே அவன் எனக் காண்பன்.

### ஆத்ம சொரூபம்

212.மாணாக்கன் வினாவுகின்றான்: ஐயனே! இவ்வாறு எல்லாவற்றையும் 'இதுவல்ல இதுவல்ல' என நீக்கிச் சென்றால், ஒன்றுமி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாத வெறும் சூனியமான ஒரு பாழ்வெளியே காணக்கிடப்பதன்றி, வேறு ஒன்றையும் காண்கிலேன். பின், ஞானி தானும் அவனும் ஒன்றெனக்காண அங்கு நிலைத்திருக்கும் உண்மைப் பொருள்தான் யாதோ? தேவரீர் கூறியருள வேண்டும்.

213, 214. அன்பனே! நன்று கடாவினாய்! நீயே விவேகமுடையவன். நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களையும் சுழுத்தி முதலிய அவத்தைகளையுங் காட்டித் தான் அவற்றாலறியப்படாது நிற்கும் சக்தி எதுவோ அதுவே அறிவனாகிய ஆன்மாவென உன் நுண்மதியில் நுனித்தறிந்து கொள்.

215. எப்பொருள் வேறொரு பொருளாற் காணப்படுகின்றதோ அக்காணும் பொருளே சாட்சியாய் நிற்கின்றது. ஒரு பொருளைக் காண்பதற்கென அந்நியமாக வேறொர் பொருளில்லாதவிடத்து அப்பொருளைக் கண்டோம் எனச் சாட்சி கூற முடியாதன்றோ?

216. ஆன்மாவோ தானே தன்னையறியும் சத்துப் பொருள். ஆதலால், ஆன்மாவும் சீவனும் அன்னியமில்லாப் பொருள்களேயெனக் காண்.

217. சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி எனும் மூன்றவத்தைகளிடத்தும் விளங்குவதாய மனத்தாற் பல்வேறு உருவங்களோடு தியானிக்கப்படுவதாய புத்தி தத்துவத்திற்கும் அப்பாற் பட்டதாய சச்சிதானந்த சொரூபத்தோடிருப்பது எதுவோ அதுவே நீ, அதுவே உன் இருதயக் கமலத்துள் இருக்கும் ஆன்மா என அறிந்து கொள்.

218. குடத்தின் கண்ணுள்ள நீரிலே பிரகாசிக்கும் சூரியன் பிரதிவிம்பத்தை (நிழலை)க் கண்டு அறிவிலி இதுவுமோர் சூரியனே என்பான். அவ்வாறே அஞ்ஞானியும் மயக்கத்தால் எழுந்த மனச் சங்கற்பத்தில் புத்தி தத்துவத்திற் பிரகாசித்த ஆன்மாவின் விம்பத்தைக் கண்டு தானும் அவ்விம்பமும் ஒன்றே எனப் பிதற்றுவான்.

219. அறிவுடையான் ஒருவன் எவ்வாறு மட்குடத்தையும் அதனுள் இருக்கும் நீரையும் ஆங்குப் பிரகாசிக்கும் சூரியனையும் தள்ளிக் குடம், நீர், விம்பம் இவற்றுக்கெல்லாம் ஒளியைக் கொடுத்துத் தானே சுயம்பிரகாசனாய் விளங்கும் சூரியனையே காண்பானோ.

220, 221, 222. அவ்வாறே தூலதேகத்தையும் புத்திதத்துவத்தையும் சித்தின் விம்பத்தையுந் தள்ளித் தானே தானாய், உள்ளும் புறம்புமில்லாததாய், நுண்ணியதின் நுண்ணியதாய், எங்கும் உள்ளதாய், நித்தியமாய், தூலசூக்குமங்களின் வேறாய், புத்தி தத்துவத்தினின்றும் விரியும் அவற்றிற்கும் காரணப் பொருளாய், எல்லாவற்றையும் தானே காண்பதாயுள்ள ஒன்றின் உண்மையியலை அறிவன். அவ்வாறு அறிந்தவனே பிறப் பிறப்பாகிய அழுக்குகளை நீக்கியவனாய் ஆனந்த வடிவினனாகின்றான். ஞானஒளி பெற்றானுக்கு எவரிடத்தும் அச்சமில்லை. வீடுபேற்றை விழைவானுக்குத் தன் மெய்யியல்பை அறிதலிலும் வேறு மேலான செயலில்லை.

223. தானே பிரமப் பொருளாகிய ஆன்மாவென அறிந்து அதனை அனுபவத்திற் காண்டலே சம்சாரமென்னும் பந்தங்களினின்றும் விடுவிக்கவல்ல நல்லேதுவாகும். அதன் வாயிலாகவே ஒருவன் உயர் வொப்பில்லா ஆனந்த வடிவாய பிரமமாகின்றான்.

224. ஒருகாற் பிரமமே தான் எனக்கண்டவன், பின் இப்பிரபஞ்சத்துட் படமாட்டான், ஆகையால், ஆன்மாவுந் தானும் ஒன்றென்றே ஒருவன் உறுதியாக நினைக்கவேண்டும்.

225. பிரமமோ, என்றும் உள்ள பொருளாய், அறிவுருவாய், ஏகமாய், மலரகிதமாய், தன்வயமுடையதாய், சீவனோடு வேறாகாததாய், அகம் புறம் எனும் பாகுபாடில்லாததாய் உள்ளது.

(தொடரும்)

மாலுமி சுக்கானைப் பிடித்துக்கொண்டு மற்ற வேலைகளையும் பார்த்துக்கொண்டு அக்கரை சேர்வதுபோல ஆத்மஞானம் அடைய வேணுமென்ற எண்ணம் ஒன்றே போதும். அதே சுக்கான்போல வழியிற் செலுத்திக் கரை சேர்க்கும். அதுகொள்ள வேணும். இது தள்ளவேணும் என்றெவையும் தேவையில்லை.

~ஆசான் அருள்மொழிகள்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மழலை மந்திரம்



*திடமாய் உறைகின்றான் திருக்கேதீச்சரத்தானே*

சிவபெருமான் வேதியனாய் வந்து ஓலை காட்டி வழக்கில் வென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொண்டார் என்ற வரலாற்றை நாம் அறிவோம். அவ்வழக்கினை விசாரித்த அவையோர் வேதியனாய் வந்தவரிடம் "நீங்கள் காட்டிய ஓலையில் உங்கள் ஊர் வெண்ணெய் நல்லூர் என்று உள்ளது. இவ்வெண்ணெய் நல்லூரில் உங்கள் வீடு எங்குள்ளது?" என்று வினவினர். அதற்கு வேதியனாய் வந்த பெருமான் "எனது வீட்டை நீங்கள் ஒருவரும் அறியீரோ? அவ்வாறாயின் என்பின்னே வாருங்கள் காட்டுகிறேன்" எனக் கூறி முன்சென்றார். அனைவரும் பின் சென்றனர். அவர் அழைத்துச் சென்று காட்டிய அவரது வீடு திருவெண்ணெய் நல்லூரில் உள்ள அருட்டுறைக் கோயிலே. இதனை நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும். அதாவது ஆலயங்கள் ஆண்டவன் அடியவர்க்கு அருள்புரிவதற்கென நிரந்தரமாய் வதியும் வதிவிடம் என்பதாம்.

வேதியர் அருட்டுறைக் கோயிலுட் புகுந்து மறைந்த அதிசயம் கண்டு தாய்ப்பசுவின் ஒலி கேட்டு ஓடிச் செல்லும் இளங்கன்று போன்று தொடர்ந்து சென்ற நம்பியாரூரருக்குப் பெருமான் அம்மையாரோடு இருக்கும் அருட்கோலத்தைக் காட்டியருளி அவரைப் பாடப் பண்ணி பண்ணிசைப் பதிகமும் கேட்டு அருள் பாலித்தார்.

திருவெண்ணெய் நல்லூரில் உறைவது போலவே இறைவன் திருக்கேதீஸ்வரத்திலும் உறைகின்றார். திருக்கேதீஸ்வரத்திலே உமை அம்மையாரோடு திருக்கேதீஸ்வரத்தான் திடமாக உறைகின்றான் என்பதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளியிருக்கின்றார். சம்பந்த மூர்த்தி சுவாமிகளும் திருக்கேதீச்சரம் சிவபெருமானது 'உறைபதி' எனப் பாடியிருக்கிறார். நாவலர் பெருமான் மாதோட்டம் எனும் பெயர் படைத்த இப்பதியிலே இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயிலைத் 'தேன்பொந்து' எனச் சிறப்பித்தார். இன்று இக்கோயில் மிகச் சிறப்பாகத் திகழ்கின்றது. இத்திருக்கோயிலையும் இங்குறையும் கௌரி நாயகி அம்மாளையும் திருக்கேதீஸ்வர நாதரையும் நினைந்து தமிழ் வேதத்தால் நாமும் அருச்சனை புரிவோம்.

திருச்சிற்றம்பலம்

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரத்தான் ஊழிமுடிவிலே பொடியாய்ப் போனவரின் சாம்பரைத் திருநீறாகத் தரித்திருக்கிறார். தஞ்சமென்றடைந்த சந்திரனைக் காத்துப் பிறைத்துண்டமாகச் சடையிலே தரித்திருக்கிறார். கோவணத்துடன் மதயானையைக் கொன்றுரித்த தோலை ஆடையாக அணிந்திருக்கிறார். நஞ்சுண்டமையால் கரிதான கண்டத்தை உடையவராய் உள்ளார். இவ்வாறான திருமேனியுடன் சிறுத்த இடையை உடைய உமை அம்மையாரோடு பாலாவி நதிக்கரையில் உள்ள திருக்கோயிலினுள் திடமாக உறைகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஔவை மொழியும் வள்ளுவர் குறளும்



"ஔவை உறுவை அரிய திருவள்ளுவரைத்
தெய்வமெனப் போற்றுதலே சீர்" ~நற்சிந்தனை~

## ஆத்திசூடி

### கண்டொன்று சொல்லேல்

கண்ணாற் கண்ட மெய் ஒன்றிருக்க அதற்கு மாறான பொய் ஒன்றைச் சொல்லாதே.

உண்மையை உரைப்பதற்கே வாய் உள்ளது. வாயின் தருமம் அதுவே. அதனால் தான் மெய்மைக்கு வாய்மை என்றனர் ஆன்றோர். வாய்மை பேசுவதே வாயின் தருமமாயிருக்க வாயினாற் பொய் பேசுவது அதர்மம் ஆகும். உண்மை பேசுவோரை உலகம் மதிக்கும். பொய்பேசுவோரை உலகம் பழிக்கும்.

உண்மை பேசுவது உண்மைப் பொருளான இறைவனோடு ஒன்றி வாழ்தற்கும் சிறந்த வழியாகும். மகாத்மாகாந்தி 'இறைவனை உண்மை' என்று குறிப்பிடுவதிலும் 'உண்மையே இறைவன்' என்று வழங்குவதையே பெரிதும் விரும்பினார். அவர் இளமைப்பருவத்தில் அரிச்சந்திரனது கதையைக் கேட்டு சத்தியம் பேசுவதைத் தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார். அவர் சாவு நேரினும் சத்தியம் தவறாதவராய் வாழ்ந்து மகாத்மாவாக மதிக்கப் படுகிறார்.

## திருக்குறள்

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்

மனதறிந்து பொய்யைப் பேசாதே. அவ்வாறு பேசிய பொய் மனச்சாட்சிக்கு மாறாதலால் மனத்தை உறுத்திக் கொண்டே இருக்கும்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

ஒருவன் பொய்பேசாது வாய்மை பேசுவதையே எப்போதும் தவறாமல் செய்து வருவானாயின் அவன் மற்ற அறங்களைச் செய்வதில் ஓரொரு சமயம் தவறினாலும் அத்தவறினால் கேடொன்றுமில்லை. பொய்யாமை என்னும் ஓர் அறம் பிற அறங்களைச் செய்யாமையால் வரும் கேட்டை வாராது காக்கும்.

# அடியாரை வழிபடுவோம்

மந்திரமும் தந்திரமும் வேண்டா மகத்துக்கள்
சுந்தரத் தாளே துணை ~நற்சிந்தனை~

## ஏயர்கோன் கலிக்காம நாயனார்




இடப்பக்கம்: மனைவியைச் சமாதானம் செய்யும் பொருட்டுப் பெருமானைத் தூதனுப்பியோன் என்னை வருத்தும் சூலை நோயைத் தீர்ப்பதிலும் சூலையுடன் மாய்வேன் என்று உடைவாளால் வயிற்றைக் கிழித்து உயிரிழந்து கிடக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனார்.

வலப்பக்கம்: சூலை தீர்க்க வந்த சுந்தர நம்பி உடைவாளைப் பிடுங்கித் தன் மார்பில் குத்தப்புகும் பொழுது பெருமான் அருளால் உயிர்பெற்று ஊறு நீங்கி எழுந்த ஏயர்கோன் தடுத்து நட்பாடல்

குருபூசைத்தினம்: ஆனி இரேவதி *(11-07-2012)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சுந்தரமூர்த்தி நாயனார்**


திருவதிகை வீரட்டானத்து இறைவனது திருவடிகளைச் சிந்தித்துச் சித்தவட மடத்தில் துயின்றிருந்த சுந்தர நம்பிக்குப் பெருமான் கிழ வேதியராக வந்து திருவடி சூட்டிய வண்ணம்.

குருபூசைத்தினம்: ஆடிச் சுவாதி (26-07-2012)

**பெருமிழலைக்குறும்ப நாயனார்**

நாளை நம்பி கயிலை செல்ல நான் கண்மணி கழிய வாழ்வார் போல் வாழ்வேனோ என்று தாம் பயின்ற யோகத்தாலே கபாலந்திறந்து கொண்டு முன்னமே கயிலை சென்ற பெருமிழலைக் குறும்ப நாயனார்.

குருபூசைத்தினம்: ஆடிச் சித்திரை (25-07-2012)





**சேரமான்பெருமாள் நாயனார்**

இடப்பக்கம்: சேரமான் பெருமாள் நாயனார் முடிசூடி யானை மீதேறி நகர்வலம் வரும்போது திருநீற்றுக்கோலம் காட்டி நின்ற ஆடை வண்ணம் செய்யும் அடியவரைத் தொழுது நிற்றல்.

வலப்பக்கம்: சேரமான் பெருமாள் உடையவர் பூசை செய்யும் வேளையில் சிதம்பர நடராசர் ஆடும் திருவடியின் சிலம்பொலி கேட்டல்.


குருபூசைத்தினம்: ஆடிச் சுவாதி (26-07-2012)

**கலிய நாயனார்**

ஒற்றியூரமர்ந்த பெருமானுக்குத் திருவிளக்குப் பணி செய்த கலிய நாயனார். செல்வம் தீர்ந்த பின்னும் செக்காட்டிக் கூலிகொண்டு அத்திருப்பணியை முட்டின்றிச் செய்தலும், அதிலும் எண்ணெய்க்கு முட்டுப்பாடு நேர மிடறரிந்து குருதி கொண்டு விளக்கேற்ற முயலும் நாயனாரும் கருணையே வடிவான கடவுள் தடுத்தலும்.

குருபூசைத்தினம்: ஆடிக் கேட்டை (29-07-2012)





**கோட்புலி நாயனார்**

பெருமானின் அமுதுபடிக்கென்று வைத்த நெல்லைப் பஞ்சக் காலத்துப் பசிபோக்கப் புசித்த சுற்றத்தாரைக் கொன்று குவிக்கும் கோட்புலி நாயனார்.

தந்தையார் தாயார்மற் றுடன்பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும்
எந்தையார் திருப்படிமற்று உண்ணவிசைந் தார்களையும்
சிந்தவாள் கொடுதுணித்தார் தீவினையின்பயன் துணிப்பார்.

~பெரியபுராணம்~

குருபூசைத்தினம்: ஆடிக் கேட்டை (29-07-2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மூர்த்தி நாயனார்**

இடப்புறம் மேலே: பெருமானுக்குச் சந்தனக் காப்புச் சாத்துதற்கு முட்டுப்பாடு ஏற்பட முழங்கையை அரைத்துச் சந்தனம் பெற நாடிய மூர்த்தியார். இடப்புறம் கீழே: சந்தனக் கட்டைக்கு முட்டுப்பாடேற்படச் செய்த அரசன் மாண்டுபோக மாலைபோட்டு மூர்த்தியாரைப் புதிய மன்னராகத் தெரிவு செய்யும் யானை. வலப்பக்கம்: திருநீறே அபிடேகமாகவும், சடாமுடியே முடியாகவும் உருத்திராக்கமே அணிகலமாகவும் கொண்டு செங்கோலோச்சும் மூர்த்தியார்.

குருபூசைத்தினம்: ஆடிக் கார்த்திகை (10-08-2012)



**புகழ்ச்சோழ நாயனார்**

போரிலே தோற்றவர் சிலரின் தலைகளைக் கொய்து வரும் அந்நாள் வழக்கப்படி தன் படைவீரர்கள் கொணர்ந்த தலைக்குவியலில் சடையுடைய தலைகண்டு பதைத்து நடுங்கும் புகழ்ச்சோழர், அதனை கனக மணிக் கலத்திலேந்தி, திருமுடித்தாங்கி அஞ்செழுத்தோதி எரியிடை மகிழ்ந்து இறங்கினார்.

குருபூசைத்தினம்: ஆடிக் கார்த்திகை (10-08-2012)



**கூற்றுவ நாயானார்**

முடி சூடாது அடி சூடி ஆண்ட கூற்றுவ நாயனார்.

வட்டத்துள்: தில்லைவாழந்தணர்களைத் தனக்கு முடி சூட்டுமாறு கைதொழுது வேண்டுதல்.

வெளியே: கூற்றுவரது வேண்டுதலுக்குச் சிதம்பர நடராசர் இரங்கித் திருவடி சூட்டுதல்

குருபூசைத்தினம்: ஆடித் திருவாதிரை (14-08-2012)


கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

**குலச்சிறை நாயனார்**

அமணருடனான புனல் வாதத்தின் போது, வாழ்க அந்தணர்... எனத்தொடங்கும் திருப்பாசுரம் எழுதிய ஏட்டை வைகை நதியில் சம்பந்தப் பெருமான் இட, அது நீரில் எதிரேறிச் சென்றது. அதனை எடுத்துவரும் பொருட்டுக் குலச்சிறையார் குதிரை மீதேறிச் செல்லல்.

குருபூசைத்தினம்: ஆவணி அநுசம் (25-08-2012)



**குங்குலியக்கலய நாயனார்**

ஓர் அடியவளது அன்புக்குட்பட்டுச் சாய்ந்து நின்ற பெருமான் அரசனது சேனையும் யானைகளும் சேர்ந்திழுத்தும் நேர்ப்படாது குங்குலியக் கலய நாயனாரது அன்புக் கயிற்றுக்கு உட்பட்டு நேர் நின்றார்.

நண்ணிய ஒருமை யன்பின் நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்

-பெரியபுராணம்-

குருபூசைத்தினம்: ஆவணி மூலம் (26-08-2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியரான எங்கள் செல்லப்பா சுவாமிகள்

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்தவுண்டு
-நற்சிந்தனை-

யோகசுவாமிகளின் குருநாதன் செல்லப்பா சுவாமிகள். இவர் அனேகமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேரடியிலிருப்பாராம். இவர் ஒரு பெரியமகான். ஆயின் இவரின் போக்கைப் பார்த்தவர்கள் விசர்ச் செல்லப்பா என்றே அழைத்தார்கள்.

இவரைப்பற்றி மேன்மையான பலவிடயங்களை யோகசுவாமிகள் கூறியுள்ளார். நான் பள்ளிச் சிறுவனாக இருந்த காலங்களில் இடைக்கிடை யோகசுவாமிகளின் ஆச்சிரமத்துக்குப் போவதுண்டு. சுவாமிகளுடன் இருக்கின்ற வேளைகளில் சுவாமிகளைச் சந்திக்க வருபவர்களில் சிலரை வாசலிலே நிறுத்தி "நாங்கள் சாத்திரம் சொல்லுகிறதில்லை சாத்திரி சம்மந்தரிடம் போ" என்று சொல்லித் துரத்தி விடுவார். சிலருக்கு "இங்கை ஏன் வாறாய்; நல்லூரைப் போய் விழுந்து கும்பிடு" என்று சொல்லி அனுப்பி விடுவார். சுவாமிகள் நல்லூரில் அற்புதங்கள் பல உள்ளன என்று சொல்வார்.

சுவாமிகள் நல்லூரைப்போய்க் கும்பிடு என்று சொன்னபோது நல்லூரில் என்ன இருக்கிறது என்று நினைத்தேன். அப்பொழுது சுவாமி சொன்னார்: "எனது குருநாதனின் திருப்பாதம் பட்ட பூமி, பரிசுத்தமான பூமி, அதைத் தொட்டுக் கும்பிட்டால் அறிவுவரும்". செல்லப்பாசுவாமிகளின் திருப்பாதம் பட்ட பூமிக்கு இவ்வளவு மகிமை என்றால் அவரின் திருப்பாதங்களில் எங்கள் தலையைப் பதித்து வணங்கினால் எமக்கு வரும் நன்மை எம்மட்டாகும்.

சுவாமிகளின் அருள்வாக்குத் தந்த ஆர்வத்தால் தருணம் வாய்த்த போதெல்லாம் நல்லூருக்குச் சென்று வழிபட்டுவருவேன். அவ்வாறு சென்ற ஒருசமயம் நல்லூரில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். கடந்த 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் யாழ்ப்பாணம் போனபோது மூத்தமகன் குடும்பத்துடன் நல்லூர்க் கந்தசுவாமிக் கோயிலுக்குச் சென்றேன். பலவருடங்களுக்குப் பின் நல்லூர்க் கோவிலுக்குப் போன காரணத்தினால் நாங்கள் கோவிலுக்குள் ஆறுதலாகச் சுற்றி வந்தோம். ஆயினும் தேரடி நினைவினால் அர்த்த சாமப் பூசை முடியும் வரை நிற்காமல் கோயிலுக்கு வெளியே வந்துவிட்டேன்.

தேரடியைக் கண்டதும் எனது மனத்தில் தேரடி மணலில் புரண்டு மணலைத் தேகத்தில் பூசி மணலில் குளித்துக் கும்பிடவேண்டும் போல ஆசையாக இருந்தது. எனது காலில் இருந்த வருத்தத்தினால் நடப்பது கடினமாக இருந்தது. தேரடியைச் சுற்றி இருந்த கர்ப்பூரக் கற்களுக்கு அருகில் சென்று பூமியைத் தொட்டுக் கும்பிட்டேன். வில்வமரத்தடியில் தான் செல்லப்பா சுவாமிகள் அநேகமாக இருப்பாரம். இதனால் அம்மரத்தடியையும் அன்புடன் கும்பிட்டேன். இதன் பின் தேரடி முன்பக்கத்தில் சென்று மருமகள் பூசை முடிந்து வரும்வரை மகனுடன் காத்து நின்றேன்.

கோவில் சங்கு ஊதியது. மகன் பிள்ளைகளுடன் சென்று தேரடிக் கர்ப்பூரக்கல்லுக்கு அருகில் நின்று மனைவியை வழி பார்த்துக் கொண்டு நின்றார். நான் நின்ற இடத்தில் நின்று கொண்டிருந்தேன். எனது வலப்புறமாக வந்த நிறம் குறைந்த ஒருவர் என்முன் நின்று என் முகத்தைப் பார்த்தார். பின் "அர்த்த சாமப்பூசைத் திருநீறு, பூசும்" என்று கூறித் தனது வலது கரத்தை நீட்டினார். அவரின் உள்ளங்கைகளில் சிறிது திருநீறு இருந்தது. எனது வலக்கை விரல்களை அவரின் உள்ளங்கையில் வைத்து திருநீற்றைத் தொட்டெடுத்துப் பூச முயன்றேன். திருநீறு விரல்களுக்கு அகப்படவில்லை. அவரின் திருநீறு இருந்த கையைப் பார்த்தேன். மங்கலான வெளிச்சத்தில் திருநீறு ஒளிவீசிக் கொண்டிருந்தது. ஆச்சரியமாக இருந்தது. அவரின் கையை நெடுநேரம் குடைந்து கொண்டிருந்தால் கோவிப்பாரோ என்று எண்ணி விரல்களிற் பட்ட திருநீற்றையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தேன். திருநீற்றைத் தந்தவர் வீதிப் பக்கமாகப் போய்விட்டார்.

கண்களை மூடிச் சுவாமியை நினைத்து நெற்றியில் பூசினேன். கண்களில் தோன்றியது ஓர் அற்புதக் காட்சி. செல்லப்பாசுவாமிகளின் முழுத்திருவுருவும் மனக்கண் முன் நிற்கக் கண்டேன். சுவாமியைக் கண்டதும் மனமெல்லாம் உருகிவிட்டது. அவரது முகத்தைப் பார்த்தால் அகிலமே மறைந்து விடும். அவரது கண்களிலே மெய்ம்மறந்த ஆனந்த உலகம் இருப்பதைக் கண்டேன். அதை என்றும் மறக்க முடியாது.

[அந்தணர்கள் அஞ்சடுக்குத் தீபம் ஆதியவற்றை அடுக்கடுக்காகக் காட்டும்போது அக்கர்ப்பூர ஒளியிலே சோதிப்பிரகாச வேலவரைத் தரிசிப்பது ஒரு பெரும் திருக்காட்சி. இக்காட்சிபோன்று பித்தர்போலவும் பிச்சைக்காரர் போலவும் சாதுபோலவுங் கூட சாமி அற்புததரிசனம் தருவார்; அதற்கு நல்லூர் வெளியிலே அவதானமாகத் திரிதல் வேண்டும். கதிர்காமத்திலே இவ்வாறான தரிசனம் கிடைப்பது பற்றிய கதைகள் பல உள்ளன. இவற்றைப் பிரமை என்று இலகுவாகத் தள்ளிவிடமுடியாது. நித்தியரான செல்லப்பர் என்னும் சிவகுரு தான் நல்லையில் அளித்த நாடகத்தில் தாங்கிய வேடத்தைத் தாகமாக நினைந்துருகியிருக்கும் அன்பர்களுக்கு அவ்வப்போது காட்டி மறைத்தல் இயல்பாய் நிகழக்கூடியதொன்றே.]

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

**சிவசிந்தனை**

## நல்லை முருகன் அட்சரமணமாலை


அம்மை யப்பர் அருளிய சேயே
ஆனந்த வடிவே அன்பே முருகா
ஆறு முகம்கொண் டவனிக் கருள்செய்யும்
ஆனந்த வடிவே அருளே முருகா
இன்பத் தேனே இரங்கும் கோனே
எமையாள் நாதா இளையோய் முருகா
ஈசா நேசா பாவ நாசா
எல்லாம் வல்லோய் எமையாள் முருகா
உம்பர் கோனே உமையாள் பாலா
உள்ளந் தன்னில் உறைவாய் முருகா
ஊமைப் பிள்ளைக் குணர்வு கொடுத்து
உன்புகழ் பாட அருளிய முருகா
எங்கும் உள்ளாய் எம்முள் நாதா
எண்ணும் அகத்தில் எழும்பேர் முருகா
ஏழு மலையாய் எழில்சேர் வடிவோய்
ஆளும் அரசே அழகா முருகா
ஐயா வேலா அரகர முருகா
சைவா சண்முக சாந்த முருகா
ஒப்பில் பொருளே உமையார் அறிவார்
இப்போ தெம்மை ஆள்வாய் முருகா
ஓமிசைப் பொருளை உணர்த்திய நாதா
ஓம்ஓம் ஓம்ஓம் ஓம்ஓம் முருகா
ஔவைக் கன்று அருளிய அரசே
அடியோங்கட்கும் அருள்வாய் முருகா.

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவதொண்டன்

நந்தன ஸ்ரீ (2012) ஆனி-ஆவணி மீ (7-8)

# நல்ல மனம்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் ~ நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி

நல்லூர்ப் பெருமான் கருணையே வடிவான கடவுள். அவர் நமக்கெல்லாம் அருள் புரிதற்பொருட்டே நல்லூரில் எழுந்தருளியிருக்கிறார். அவர் தம்மை நாடிவரும் அன்பரையெல்லாம் அன்னையைப் போல் ஆதரிப்பார். வில்லங்கம் எல்லாம் போக்குவார். வேண்டுவனவற்றையெல்லாம் இல்லையென்னாது வழங்குவார். இவற்றிற்கோர் ஐயமுமில்லை. ஆனால் நாம் நல்லூர்ப் பெருமானை நாடிச் செல்லுமிடத்து நல்ல மனத்தோடு செல்ல வேண்டும்.

நாம் நல்லூர்த் திருவிழாவின்பொருட்டு வேலைத்தலத்திலிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு வருகின்றோம். வெளிநாடுகளில் இருந்தும் பறந்து வருகின்றோம். வீடுவாசல்களைப் புனிதமாக்குவதுடன் வீதியையும் சுத்தம் செய்கின்றோம். ஒருபோது உணவருந்திச் சைவமாக வாழ்கின்றோம். வேளையறிந்து பூசைக்கு விரைகினறோம். இவ்வாறெல்லாம் இருந்தென்ன? **"திருத்திக் கருத்தினைச்"** செவ்வனே நிறுத்தாவிடின். சுவாமிகள் "தன்னைத் திருத்தாது யாத்திரைக்குப் போவதனால் ஆவதென்ன?" எனக் கேட்பார். தன்னைத் திருத்தாது காசி, கயிலாயம் என்று யாத்திரை செய்வதனாலும் பயனொன்றுமில்லை. "இருதயம் சுத்தமாயிருக்க வேணும், இதற்கு மேல் என்னத்தைச் சொல்லலாம்" எனச் சுவாமிகள் ஓர் அன்பருக்குச் சொல்லியிருக்கிறார். ஆதலால் நல்லூரானிடம் செல்லும் பொழுது நல்ல மனத்தோடு செல்ல வேண்டும்.

"திருவருட் செயல் எப்படியோ' எனும் கீதத்திலே சுவாமிகள் நல்லூரானைச் சீமானே! கோமானே! என விளிக்கின்றார். நல்லூர்ப் பெருமான் பெருஞ்சீமான். அவன் இராசாதி ராசன். அச்சீமானின் முன் நில்லாத செல்வத்தைப் பெரிதென எண்ணிச் செருக்குடன் செல்லலாமா? அந்தக் கோமானின் முன் அதிகார மிடுக்குடன் செல்வது வெட்கக்கேடு அல்லவா? இவையெல்லாம் 'நான்' எனும் அகங்காரத்தால் விளைகின்றன.

இந்த நான் நான் என்று அகங்கரிப்போரை "நலனறியாமல் நானென்று சொல்லிப் பலபேசும்..." எனச் சொல்லிவந்த சுவாமிகளது நாவில் 'பாவி' என்ற சொல் வந்துவிட்டது. அவர் பாவி என்று எவரையும் சொல்லாதவர். ஆயினும் 'நான்' என்ற முனைப்புடன் ஒவ்வாதன வெல்லாம் சொல்வது பெரும் பாவமேயாம். இப்பாவ சிந்தனையுடன் நல்லூர்ப் புண்ணியமூர்த்தியிடம் செல்லலாமா? வணக்கம் என்பதன் பொருளென்ன? தலை தாழ்த்துதலே வணக்கம். தலை நிமிர்த்துதல் ஆட்சி செய்யும் அதிகாரமிடுக்கின் செயல். பெருமானது சந்நிதியிலே அதிகாரமிடுக்குடன் செல்வது எவ்வளவு பேதைமை. அதோ! நல்லூர் எசமானைப் பாருங்கள் ஒரு தூணருகிலே ஓர் ஏழை அடியவனாக ஒதுங்கி நிற்கிறார். அவ்வாறு நிற்குமிடத்திலே பள்ளத்தை நாடி ஓடும் வெள்ளம் போல் விமலனருள் பொங்கி வழியும்.

நல்லூர்ப் பெருமான் நம்மை ஆளும் நாயகன். நாமெல்லாம் அவனது அடிக்குடிகள். அவனது அடியவர்கள். அவ்வகையில் நாமெல்லாம் ஒரே சாதியினர். 'தொண்டர் குலம்' எனும் ஒரே குலத்தினர். கந்தக் கடவுள் நம் எல்லோரதும் உண்மைத் தந்தை. நாமெல்லாம் அவர் பிள்ளைகள். அவ்வகையில் நாமெல்லாம் உடன் பிறந்தார். உடன் பிறப்புக்களான நாம் ஒருவரோடொருவர் வஞ்சம் பொறாமை கோபம் கொள்ளலாமா? இத்தகைய வஞ்ச நெஞ்சுடன் சென்றால் சுவாமிநாதன் நல்ல மயில் மீது ஏறிவந்து காட்சி கொடுப்பாரா?

வருவார் வருவார் வரந்தருவார் சுவாமி
வஞ்சம் பொறாமை கோபம் நெஞ்சில் வையாதே

என்று சுவாமிகள் பாடியிருப்பதை நாம் பல தரமும் இராக தாளங்களுடன் பாடுவதால் என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சிந்தனை

# நல்ல மலர்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால்-நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி 1

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர்-ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது 2

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றாள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப்-பெருத்த
மயிலில்வரும் வேலா விமலா வெனச்சொற்
பயிலவறு மெங்கள் பவம் 3

பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்குஞ் சாந்தம் பொறுமை-சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்துந் தீருமே
சினமு மடங்குமே தேர் 4

தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை-நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம் 5

நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவி! பணிவோர்-நிலவுலகில்
நல்லூ ரெனும்பதியை நாடித் தெரிசித்தாற்
பல்லூழி வாழலாம் பார் 6

பாராயோ வென்னைநீ பார்த்துக் கவலையெலாந்
தீராயோ செய்ய திருவேலா-வாராயோ
மாமயி லேறி மகிழ்ந்து வரந்தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு 7

சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும
மறக்குறத்தி வள்ளி மணாள-நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர்வாழ் ஆண்டவனே
நீடும் அருள்தருவாய் நீ 8

நீயேநா னென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம்வணங்கும்-நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று 9

இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் னகவிருளைத் தீர்ப்பதற்குக்-குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் "ஒரு பெரிய சீமானிடம் சென்று ஒரு சதம் இரண்டு சதமா கேட்பது" என வினவுவார். சிறுபிள்ளை தங்க நாணயத்தின் பெறுமதியறியாது. அது இனிப்பினையே பெறுமதிமிக்கதென எண்ணிக் கேட்கும். தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்ற வரம் கேட்டுப் பெற்ற ஒருவன் தண்ணீர் குடிப்பதற்கும் வகையின்றிப் பட்டபாட்டைச் சித்திரிக்கும் கதையொன்றும் வழங்குகின்றதல்லவா. இத்தகைய அற்ப ஆசைகளுடன் நல்லூர் ஆலயத்துள் நுழைவது அழகா?

மன அழுக்குகள் யாவற்றுள்ளும் முதலாயுள்ளதும், யாவுக்கும் மூலமானதும் ஆசை. நில்லாத செல்வத்தில் ஆசை. நிலையில்லாத பொய்யுடலில் ஆசை, பெண்டு பிள்ளைகள் மீது அளவில்லாத ஆசை, நாடெல்லாம் மாலை சூட்டிப் போற்றும் பெருந் தலைவனாக விளங்க வேண்டுமென்ற புகழாசை. இவ்வாசைகள் மண்டிக்கிடக்கும் மனத்தில் முருகப் பெருமான் மீது நேசம் எவ்வாறு முளைக்கும். இக்களைகளை எல்லாம் நீக்கி வெளியாக்கிய அகத்திலேயே அறுமுகப் பெருமான் மீது அன்புபெருகும். இவ்வாறு அன்பு பெருகும் மனத்தில் மற்றொன்றிலும் ஆசை எழா. இம்மனம் இந்திரலோகம் ஆளும் அச்சுவையையும் வேண்டாது. வீட்டின்பத்தையும் விழையாது. அது இவற்றையெல்லாம் வேண்டாதிருக்கும் விழுச் செல்வத்தையே வேண்டும். கூடும் அன்பினில் கும்பிடுதலையே விரும்பும். இவ்வாறு இச்சையெல்லாம் வெறுத்து எழில் முருகனைக் கும்பிட்டு நிற்போர்க்கு வேண்டிய தெல்லாம் கிடைக்கும். மழைபோல் முருகப் பெருமானது கருணை பொழியும்.

"விளையும் இச்சையெல்லாம் வெறுத்தே எஞ்ஞான்றும்
இளையோன் திருப்பாதம் ஏத்த ~ மழைபோல்
கருணை வருமே கருதிலங்கை நாட்டீர்
தருண மிதுகண்டீர் தான்."

ஞானமுடைய அகத்தாற் செய்யும் வழிபாடே நல்லூரானுக்கு உகந்த வழிபாடு. இந்த ஞானத்தாற் செய்யும் வழிபாட்டை எங்கள் சுவாமிகள் எடுத்துரைத்திருக்கின்றார்.

"விரைமலரைத் தூவியே மெய்விதிர்த்துத் தொண்டர்
நிரையாய் நினைப்பறவே நின்று ~ கரையில்லா
ஆனந்தங் கொண்டே <u>அவனே நான்</u> என்று நிதம்
ஞானத்தாற் சொன்னார் நயந்து."

யோகசுவாமிகள் காட்டிய வழியிலே நல்லூர் வழிபாடு செய்யும் சிவதொண்டர்க்குரிய இலட்சிய வழிபாடு இதுவே. இவ்வாறு வழிபடும் சிவதொண்டர்களை நல்லூரான் தன் கருணைத் திருக்கரத்தால் அரவணைத்துக் கொள்ளும் அழகை வியந்தும் சுவாமிகள் ஒரு வெண்பா பாடியிருக்கின்றார்.

"நினைக்கும் அடியாரை நீயேநான் என்றே
அணைக்கும் திருக்கரந்தான் என்னே ~ கனைக்கும்
கடல்சூழ் கவினிலங்கைக் கார்சூழ் நல்லூரான்
தொடுக்கும் வல்வேலைத் துதி"

செல்லப்ப தேசிகர் தேரடியிலிருந்து சுவாமிகளுக்குச் சொன்னதும், சுவாமிகள் நூற்றுக்கணக்கான முறைகளில் போற்றிச் சொல்லியிருப்பதுமான மகாவாக்கியப் பொருளை அநுபவமாக்கிக் கொள்ள விரும்பாத மனம் நல்லமனமன்று. அது தீயமனமே. இத்தீய மனத்தை விளித்துப் பாடும் இனிய கீதமொன்று நற்சிந்தனையிலுள்ளது. இக் கீதத்திலே தீய மனத்தை 'முழுதுமுண்மை' எனும் மகாவாக்கியத்தை முற்றும் நம்பி, முழுதுமான கோலங்களில் மோகம் கொள்வதைக் குறித்து நொந்து நொந்து அழுது, அதனை நீக்கி உண்மைப் பொருளான பெருமானையே உகந்து தொழுது தொழுது அதிவேகமாய் ஓடிவருமாறு அழைக்கின்றார். இவ்வாறு ஓடிவரும் மனம் நல்ல மனம். அத்தகைய நல்லமனத்தால் வழிபடும் அடியவரை ஆதரித்தணைத்துச் செழுமலர்த் திருவடி தரிசனத்தையும் வழங்குவான் நல்லூர் ஆட்டக்காரன்.

**செழுமலர்த் திருவடி**

**பல்லவி**

செழுமலர்த் திருவடி தரிசிக்கலாம்
வாராய் தீய மனமே

**அநுபல்லவி**

தொழுமடியார் பழவினைகள் கழுவித்தள்ளி
துரியநிலை அருளவல்ல நல்லை நாதன் (செழுமலர்)

**சரணங்கள்**

முழுது முண்மையென முனிமுன் சொன்னமொழி
மோகந் தீர்க்குமதை முற்றிலும் நம்பி
அடுத்து வந்தவெனை ஆதரித் தாண்டுகொள்
அம்புவி மீது நம்பினேனே (செழுமலர்)

அடியவர் குடியா ஆளும் அரனே
அரகர சிவசிவ சங்கர சம்போ
அழுதுந் தொழுதுமடி பாடி யரற்றி
அதிவேக மாயோடி வாராய் (செழுமலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

Volume-76 (July-August) Issue- 7-8

# Natchinthanai

## THE TRUE PATH

More precious than life itself is rectitude. Those who practice rectitude possess everything that is worthwhile. Avoidance of killing and stealing, refraining from slandering others, absence of covetousness, humility, truthfulness and so forth –these are the characteristics of a life of rectitude.

Whatever the work may be, a man should train himself to carry it out with perseverance, devotion and joy. By disciplining himself in this way he will acquire steadiness of mind, that is to say, the mind will become one-pointed. This will allow the Atma increasingly to manifest its power. What one thinks will take place immediately, and the differentiation that arises from calling this man a friend and that man an enemy will not enter the mind and give room for care and worry.

"From me is all evolved; by me is all sustained; into me is all dissolved" – let such pure thoughts occupy our minds. Further, let us meditate constantly on the ideas, that I am not lacking in anything, that all love me and I love all. If we practice in this way, we shall easily acquire the capacity to know everything and the power to do everything.

Om Tat Sat Om[1].

[1] This is one of the most important of all mantras. It is given in the *Bhagavad Gita* (Cha. XVII vv 23-28). The literal meaning is –'*Om* is That, the Reality'. *Sat* denotes 'that which is real' and also has the meaning of 'goodness'. *Tat* means literally 'that' and signifies the universality or omnipresence of the One Reality.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE SAIVA SAINTS

## 14. Saint Arivaal Thaaya Naayanar

Thaayanar began to stagger. He had gone without food for many days. He tried to keep himself steady but was unable to do so. His wife did her best to keep him from falling, but as she was carrying the *Pancha Kavya* (five extracts from the cow) in her hand, she could not give him her fullest support. As he fell, the rice made from red paddy, the red tender cabbage and the mango chutney he was carrying in his basket fell on the ground and were scattered in all direction. ""Of what use for us to go to the temple now?" he said. It has not been granted to my miserable self that the Lord, who liberates us from our woes, should dine on the rice I brought for him. Of what avail is life to me now?"

Thaayanar from Kanamangalam ( in the Chola country ) was a Velala, who had been serving the lord by offering Him daily at the temple His sacred meal, consisting of rice made from red paddy, red cabbage and mango chutney. While he was engaged in these services he had become poor. But he hired himself out as a labourer in the fields and continued to serve the Lord as before. Of the Paddy he received as wages, he offered Him all the red grain and took for own food the dark grain only. It happened at this time that all the paddy in the field turned red. Thaayanar was over joyed that his merit in the past birth had enabled him to obtain such good paddy fit to be offered to the Lord.

As there was no rice from the dark grains available for husband's use, his wife would cook leaves for him; these he ate and continued to serve the Lord. Then, when leaves too became scare, he had to subsist on water. It was while he was thus living on water and had become weak in body that he had gone out, with his wife with his offering to the temple.

Now as he lay there where he had fallen with all his offerings dashed to the ground, it seemed to him that there was only one course of action open to him. "Has my Lord not denied?" he cried and, seizing his sickles, as though cleaving asunder further births, he began to cut his throat, when behold! – an arm arose from a fissure in the earth and held his hand. It was the arm of the Lord, of Thiru-Chit-Ampalam, outstretched in the great dance. At the same time, there could be heard the crunching noise caused by the eating of the mango chutney, showing the Lords acceptance of His devotee's offering. When the scared hand stayed the saint's strong arm, he was at first taken aback; but was immediately filled with joy again and with hand clasped in worship, cried "Praised be my Lord who saw His devotee's ignorance, yet still accepted his service and came from a cleft in the earth and ate what he offered. Praised be the great Light with His consort, the Lady of slender waist. Praised be the Lord with matted locks whose body is of coral hue, covered with the holy ash, the Primeval One." And as he praised Him thus the Lord appeared before him on his Bull. "You have done well. Now abide forever in my world together with your wife" He said. Without hesitation they both went to Him and He who dances in the great assembly (*Sabha*) departed with them on his young Bull.

As the saint had attempted to cut his throat with an *Arivaarl* (sickle) he has come to be known as Arivaarl Thaaya Naayanar.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE GURU

*[continued from last issue.]*

*Normally, however, when Bhagavan said 'Guru' he meant something far greater than this, something different not in degree but in kind; he meant Sat-Guru, or Guru-deva, and that too in its highest meaning as nothing less than one who has realised his identity with the Self and abides therein constantly.*

Devotee: What are the distinctive characteristics of a Guru by which one can recognise him?

Bhagavan Ramana Mahrshi.: The Guru is one who at all times abides in the profound depths of the self, He never sees any difference between himself and others and is quite free from the idea that he is the Enlightened or the Liberated One, while those around him are in bondage or the darkness of ignorance. His self-possession can never be shaken under any circumstances and he is never perturbed.

D.: What is the essential nature of *upadesa* or spiritual instruction given by the Guru?

B.: The word upadesa literally means 'restoring an object to its proper place'. The mind of the disciple, having become differentiated from its true and primal state of Pure Being, which is the Self and which is described in the scriptures as *Sat-Chit-Ananda* (Being-Consciousness-Bliss), slips away therefrom and, assuming the form of thought, constantly pursues objects of sense-gratification. Therefore it is assailed by the vicissitudes of life and becomes weak and dispirited. Upadcsa consists in the Guru restoring it to its primal state and preventing it from slipping away from the state of Pure Being, of absolute identity with the Self or, in other words, the Being of the Guru.

The word can also be understood as meaning 'to present an apparently distant object to close view; that is to say, it consists in the Guru showing the disciple what he had considered as distant and different from himself to be immediate and identical with himself.

D.: If as this implies, the real being of the Guru is identical with that of the disciple, why have the scriptures categorically declared that, however great Powers one may attain, he cannot attain Self-realisation without the grace of the Guru?

B.: It is true that the being of the Guru is identical with that of the disciple; however, it is very seldom that a person can realise his true Being without the grace of the Guru.

It is not really the bodily individual that is the Guru.

B.: What is your idea of a Guru? You think of him in human shape as a body of certain dimensions, complexion, and so on. A disciple, after Realisation once said to his Guru: 'I now realise that you dwelt in my innermost heart as the one Reality in all my countless births and have now come before me is human shape and lifted this veil of ignorance. What can I do for you in return for such a great benefit?' And the Guru replied: 'You need not do anything. It is enough if you remain as you are in your true state. That is the truth about the Guru.

(To be continued)

---

*The Courtesy is to Sri Ramanashram and Arthur Osborne.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Yogaswami: The Sage of Lanka*

The fundamental aim of all religions is the realization of Truth. This is a matter of direct experience in which neither the mind nor the intellect nor any human faculty is involved. It is a question of being. There is only one reality, which is God or 'That' (*tat*) so that realization of truth means being aware that you are one with God or that you are "that' (*Tat tvam asi*). This is the meaning of 'know thyself'. He who knows himself knows everything and is one who has attained liberation while in the human body (*jivanmukta*). There is nothing left for him to do but to help others to come to the same realization. Such a person is the true master (sat-guru).

Those who have attained this state are exceedingly rare. But one such 'realized soul' lived in the North of Sri Lanka for over ninety years and left his body only in March 1964. He was known as Yoga Swami and took birth a hundred and twenty-one years ago. He received his early education in a Christian missionary school and, either tan or later, acquired a good knowledge of English.

After leaving school, he was employed for some years as a storekeeper in the Irrigation Department at a place about forty miles south of Jaffna. During this time, in his early manhood, he met his guru — **Chellappa Swami**. Soon afterwards he gave up his job — and everything else — in order to follow him.

**Thirst for truth**

Chellappa Swami was usually to be found in the neighborhood of Nallur, now a suburb of Jaffna town, but once the capital of the Tamil kings of the place. The is situated the most important temple in Jaffna, dedicated to **Kandaswami** or **Murugan**. Close to the temple itself is a large building used to house the massive wooden chariot in which the image of Murugan is drawn round the temple on the occasion of the yearly festival.

This was Chellappa Swami's favourite haunt and the place where the imparted most of his teaching to his disciples. He did not do anything but wandered about as he pleased, clothed in rags and begging for food for his sustenance. Most people thought that he was mad, for he would often throw stones at those who tried to approach him and abuse them in language.

Only very few had the purity of mind and heart and understanding to perceive his true greatness and to detect the unlimited wealth that he had in his power to bestow. Yoga Swami was one of the lucky few. Even he was chastened and driven out many a time, but Yoga Swami withstood all these because of his thirst for realizing the Truth.

**Driven out**

It would appear that Yoga Swami was with his guru only for a few years. At a certain point of time he was driven out and told to **"Stand on your own legs!"**. There is also a story that when he came to visit Chellappa Swami in the final stages of his last illness, the latter would not allow him to enter the hut in which he was lying, but shouted from within, **"Stand outside and see!"**

During the years immediately before and after Chellappa Swami's *Mahâsamâdhi*, Yoga Swami was living under a tree at Columbuthurai on the outskirts of Jaffna town. At this time he appears to have been practicing severe austerities and in his outward behaviour to have followed the example of his master, for he would drive away those who tried to approach him.

But gradually, as more and more devotees gathered round him, his austere demeanour seems to have been relaxed, and he was eventually persuaded to occupy a small hut in the garden of a house near the tree under

---

*The above article was written by Santhaswami in commemoration of 123rd birth anniversary of Yogaswami fell on 21st May 1995 and published in 'The Island' on 4th June 1995.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which he had been living. This remained his 'base' for the rest of his life. There devotees would come to him for help in all their problems, usually in the early mornings and in the evenings.

**Teachings**

Since the majority of his followers were Hindus, his teaching was expressed mainly in Hindu terms, but he himself was beyond all distinctions of religion. Buddhists, Christians, Muslims and agnostics would all come to him for help and guidance, for he had reached the summit to which philosophies and religions are merely paths. Like a good doctor he knew what was best for each of his 'patients' and altered his 'prescriptions' accordingly. His teaching embraced all the yogas and at the same time lay beyond all of them.

Nearly all his devotees were householders and engaged in some employment or other, and apart from one or two exceptions, he rarely advised them to retire from their employment. People would often come and say that they wanted to give up their jobs in order to be able to devote more time to spiritual practices but he did not usually encourage them to do this, since, for him, the whole of man's life had to be made a spiritual practice and he would not admit any division of human activity into holy and unholy.

**Work**

To most of those who came to see him, he would end by saying **"Now go and do your work!"** He laid great emphasis on work and work for work's sake — that is, *Karma Yoga*. This like *Siva dhyana* (meditation on God or what is Real), was one of the 'medicines' that in one form or another, he most frequently administered. He gave no lectures and held no classes. His teaching was given spontaneously as it came either at his hut in the mornings or evenings or at some apparently chance encounters in the bazaar or in the streets or maybe, if a devotee was sufficiently fortunate, at a surprise visit to his own house. Most of what he said was usually intended for one particular individual though others present would of course also profit from it.

**Good thoughts**

He untiringly tried to raise his followers to the understanding that Truth lies beyond all forms. Throughout his life he also did his best in many different ways to encourage and revive the proper observance of traditional practices and every evening at dusk, a lamp, symbolizing he sacred fire, would be lit in his hut and certain devotional hymns sung in his presence.

As his followers became more and more numerous, he gave them work to do and encouraged them to translate into Tamil a few writings in Sanskrit or English that he considered to be important.

In 1935 he made them start a monthly paper devoted exclusively to religious subjects. In every issue would appear one of his songs. These songs, to which he gave the name of *Natchyintanai* — that is, 'Good Thoughts' — flowed from him spontaneously and might come forth at any moment.

In 1953 he sanctioned, at the desire of some of his followers, the establishment of a place in Jaffna town where they could meet and this developed into a centre where they were able to practice meditation, sing devotional songs, hold classes in religion and philosophy and generally carry on any activities useful for spiritual growth.

**Sivathondan**

The name which he gave to the paper, to the institution and to the organization which controlled it was *Sivathondan*. *Siva* is God and *Thondan* has the meaning of servant and also that of devotee, so that the word *Sivathondan* signifies a devoted servant of God or one whose service is devoted to God, that is, one who does everything that he has to do for God and not for himself.

Everything is God's work and in one sense everyone, every being, is doing *Sivathondan*. But man has won the unique privilege of being able to do it consciously. To make use of this rare opportunity is the best and easiest way open to him in this age of purifying himself, subjugating his ego and attaining thereby that unalloyed happiness which is his birthright.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சிவதொண்டன் சபை வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 6 ஆம் பதிப்பு | 300.00 |
| 02. | NATCHINTHANAI (English Edition) | 400.00 |
| 03. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள்-சாதாரண பதிப்பு | 12.00 |
| 04. | பெரிய புராண வசனம் | 300.00 |
| 05. | யோகசுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ஆம் பதிப்பு) | 250.00 |
| 06. | என்நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோகசுவாமிகள் | 50.00 |
| 07. | நமச்சிவாய மாலை | 35.00 |
| 08. | தியானகாலச் சிந்தனை (புதிய மூன்றாம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோகசுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 50.00 |
| 10. | சிவத்தியானமாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமானசுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமானசுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய மூன்றாம் பதிப்பு) | 150.00 |
| 14. | HOMAGE TO YOGASWAMY | 10.00 |
| 15. | சண்முக கவசம் | 25.00 |
| 16. | முருகன் திருப்பாடற் திரட்டு | 25.00 |
| 17. | ஈழத்துத் திருப்புகழ் | 50.00 |
| 18. | சர்வஞானோத்தர ஆகம ஞானபாதவசனம் | 50.00 |
| 19. | திருவாசகம் | 220.00 |
| 20. | சிவதொண்டன் - செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு | |
| | ஆண்டுச் சந்தா a) உள்நாடு ரூபா | 500.00 +100 |
| | b) வெளிநாடு US $ | 20.00 +5 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடம் திரு. மா. திலகரத்தினம்
25/A, பாமன்கடை ஒழுங்கை,
கொழும்பு - 06.
தொலைபேசி : 0112 - 365102

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக்கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்பவேண்டிய பெயரும் விலாசமும்.
Cheque, Drafts and Money Orders should be drawn in favour of Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


**Bilingual Monthly, Registered at the G. P. O, as News Paper.**
**No: R. B. N. 782/1961**
**a) Printer :** Astraluxumi Publication
320, Sea Street,
Colombo - 11.
**c) Published for :** M. Thilakaratnam
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
T.P: 021 - 2222799
**Date of Publication :** 01st July 2012
**Editor:** S. Vinasithamby B.A (Hons)
Sivathondan Nilayam,
Chenkalady.
T.P: 065 - 2240272


If undelivered please return to:
The Manager, "Sivathondan Nilayam"
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.

49 LIBRARIAN,
COLOMBO TAMIL SANGAM,
57TH LANE,
COLOMBO 06.


கொழும்புத் தமிழ்ச் சங்கம் நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org